# லக்ஷத்வய அத்யாபகர்
# ஸ்ரீமத் அகோர சிவாசாரியர் அருளிய
# சிவ பஞ்சாவரண ஸ்தோத்ரம்


தமிழ் விளக்கம் :

சிவாகம ஆய்வுரைமணி சிவாகம கலாநிதி

**பேராசிரியர் டாக்டர்.SP.சபாரத்தின சிவாசாரியர்**



வெளியீடு :

**G. கார்த்திகேயசிவம்**

சென்னை

2006

© Kartikeya Sivam

First Print : July 2006

500 copies

Copies can be held at :
G. Karthikeya Sivam
17, Ma.Po.Ci. Street
M.G.R. Nagar,
Chennai 600 073
Ph. : 2474 4229

Typeset and Printed at :

**DIVINE PRINT**
32, Gaffur Street,
Royapettah, Chennai - 600 014.
Phone : 6525 4242
Mobile : 92831 77110

# முன்னுரை

சைவ மரபில் வந்த அனைவர்க்கும் ஆன்மபலத்தையும் சரீரபலத்தையும் செல்வ வளத்தையும் சீரிய பேறுகளையும் சிவத்துவ மயமான சிவ குணங்களையும் எளிதாகவே அருளவல்லது ஆன்மார்த்த சிவபூஜையே ஆகும். எல்லா இடையூறுகளையும் இடர்ப்பாடுகளையும் போக்க வல்லது ஆன்மார்த்த சிவபூஜையே. ஒவ்வொரு சைவ இளைஞரும் முறைப்படி தீக்ஷை பெற்று பூஜா விதிமுறைகளை ஐயம் திரிபறத் தெரிந்து கொண்டு ஆன்மார்த்த சிவபூஜையை அவசியம் செய்ய வேண்டும். அந்த ஆன்மார்த்த சிவபூஜையை விஸ்தாரமாக பாஹ்ய பூஜையாகச் செய்வது போன்ற பாவனையில் ஆதி சைவராகிய ஸ்ரீமத் அகோரசிவாசாரியர் சிவபஞ்சாவரண ஸ்தோத்திரம் என்பதை அருளியுள்ளார். சிவபூஜா சம்பந்தமாக இதுவரை வந்துள்ள ஸ்தோத்ரங்களுள் இது மிகவும் தலை சிறந்தது ஆகும். அகோர சிவாசாரியாரின் தீக்ஷாவிதிக்கு வியாக்யானம் எழுதிய நிர்மலமணி தேசிகர் பல இடங்களில் சிவ பஞ்சாவரண ஸ்தோத்ரத்திலிருந்து மேற்கோள் காட்டுகின்றார். அந்த அளவுக்கு இது உயர்ந்தது.

ஆன்ம பலத்தையும் அருள் வளத்தையும் பொருள் வளத்தையும் அரிய பெரிய நற்பேறுகளையும் மிக எளிதில் வழங்குவதுதான் சிவ பரிபூரணமான தோத்திரவடிவில் விளக்கியுள்ளார் அகோர சிவாசாரியார். இதனைத் தமிழ் விளக்கத்துடன் தமது தந்தையார் மணிவிழாவில் அச்சிட்டு வெளியிடும் சிவஸ்ரீ கார்த்திகேய சிவம் அவர்களுக்கு ஆதிசைவ சமுதாயம் மிகவும் கடமைப்பட்டுள்ளது. உரிய

காலத்தில் அவர் இதனைச் செய்திருப்பது, இறையருளால் நேர்ந்த ஒன்றே எனக் கூறுதல் மிகை ஆகாது. அவருக்கும், மணிவிழா காணும் சிவஸ்ரீ கங்காதர பட்டர் - ஸ்ரீமதி கௌரி அம்மையார் தம்பதியினர்க்கும் மற்றும் அவர்களின் இல்லத்தினர்க்கும் இறையருளால் நற்பேறுகளும் நலன்களும் வளங்களும் வாய்ப்பன ஆகுக.

ஆதிசைவர் ஒவ்வொருவரும் இந்தத் தோத்திரத்தை தினம் தோறும் பாராயணம் செய்து ஆன்மை பலத்தையும் அருள் வளத்தையும் வெற்றியையும் சாதித்துக் கொள்ள வேண்டும்.

அண்ணாநகர் அன்புடன்
26-7-2006 சபாரத்தின சிவாசாரியார்

சிவமயம்

சிவ சிவ

# பதிப்புரை

*மாத்ரு நேதோ பவ, பித்ரு தேவோ பவ*

– தைத்திரீய உபநிஷதம்

*அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்*

– ஔவையார்

## மணிவிழா மலர்

எல்லாம் வல்ல ஸ்ரீ வண்டார்குழலி உடனுறை வடாரண்யேச்வர ஸ்வாமியின் துணை கொண்டும், பெரியோர் களின் நல்லாசியுடனும் நடை பெறுகின்ற எனது பெற்றோரின் மணிவிழா மலராக நமது குலமணியாகிய ஸ்ரீமத் அகோர சிவாசார்யர் இயற்றிய பஞ்சாவரணஸ்தவம் என்னும் நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சைவாகமம் தொடர்புடைய அனைத்து நூல்களையும் வெளியிட வேண்டும் என்பதையே எனது பிறவியின் குறிக்கோளாகக் கொண்டுள்ளேன்.அப்படி ஒரு எண்ணத்தை என் மனதில் தோற்றுவித்த இறைவன் அதை செயல்படுத்தவும் அருள்புரிந்து கொண்டே இருக்கிறான் என்பதை நினைக்கும் போது மனம் மட்டற்ற மகிழ்ச்சியில் திளைக்கிறது. நூல் வெளியிடும் பணியைத் தொடங்கிய காலம் முதல் உதவி வரும் அறக்கட்டளையின் அங்கத்தினர்களுக்கும் மற்றவர்களுக்கும் என் அன்பு கலந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலுக்கு உரை எழுதி உதவிய பேராசிரியர் டாக்டர் SP. சபாரத்ன சிவாசார்யர் அவர்களுக்கும், கணிணியில் வடிவமைத்த திரு. பா. கணேஷ் அவர்களுக்கும் ............ அச்சகத்தாருக்கும் எனது நன்றிகளையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்

அன்புடன்

க. கார்த்திகேயசிவம்



# வேண்டுகோள்

ஒவ்வொரு சமயத்திற்கும் அடிப்படையாக அவற்றின் உண்மைகளை விளக்குபவையாக விளங்குபவை நூல்களே ஆகும். எனவே அவற்றைப் போற்றிக் காப்பது சமயிகளின் கடமையாகும். ஆனால், சைவ சமயத்தின் ஆணி வேராகிய சிவாகமங்கள் மற்றும் அவற்றின் வழி நூல்கள், ஆகியவற்றின் ஓலைச் சுவடிகள் கடந்த 40 ஆண்டுகாலமாக பாதுகாக்கப்பட்டு வந்தும், சைவர்களின் முயற்சியில் இதுவரை ஒரு நூல் கூட வெளி வரவில்லை என்பது வேதனைக்குறிய விஷயம். சிவாலயத் திருப்பணி எவ்வளவு அவசியமோ அவ்வளவு சிவாகமத் திருப்பணியும் அவசியம்.

என்பதை உணர்ந்து சைவர்கள் யாவரும் ஒன்று கூடி சைவாகமம் தழைக்க பணி செய்ய வேண்டும் என்று வேண்டுகிறேன்.

என்னை ஈன்றெடுத்தும் அவையிடத்து முந்தி இருக்கவும் செய்த எனது பெற்றோரின் திருவடிக் கமலங்களில் இந்நூலை சமர்ப்பிக்கிறேன்.

அன்புடன்
க. கார்த்திகேயசிவம்



ஸ்ரீமத் அகோர சிவாசார்ய சரணாரவிந்தாப்யாம் நம:

# ஸ்ரீமத் சிவபஞ்சாவரண ஸ்தோத்ரம்

லக்ஷத்வய அத்யாபக
ஸ்ரீமத் அகோரசிவாசாரியார் அருளியது

आदित्यबिंबमध्यस्थं रक्तमूर्तिं सदाशिवम् ।
प्रणम्य परिवारेण स्तोष्येऽभ्यर्चितमीश्वरम् ॥ १ ॥

சிவசூரிய மண்டலத்தின் நடுவில் விளங்குபவரும், சிவந்த திருமேனியை உடையவரும், மூவகை ஆன்மாக்களாலும் நன்கு அர்ச்சித்துப் போற்றப்படுபவரும், ஈசுவரனும் ஆன ஸதாசிவப்பெருமானை அவரது ஐந்து ஆவரண கணங்களோடு பூரணமாக வெளிப்பட்டு இருப்பவராகத் தியானித்து நன்கு வணங்கித் தோத்திரம் செய்கிறேன்.

पद्मासनं रक्ततनुं द्विनेत्रं श्वेताब्जयुक्तांसगहस्तयुग्मम् ।
रक्ताम्बरालेपनमाल्यभूष्यं स्थितं सहाङ्गैः शिवसूर्यमीडे ॥२ ॥

தாமரைமலரில் வீற்றிருப்பவரும் சிவந்த திருமேனி; இருகண்கள்; இரண்டு தோள்களோடு சேர்ந்து காணப்படும் வெள்ளைத் தாமரைப் பூக்களை ஏந்திய இரண்டு கைகள்; சிவந்த நிற ஆடையாலும் செஞ்சந்தனப் பூச்சாலும் செந்நிற மலர்மாலைகளாலும், சிறந்த ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ள திவ்யமான தோற்றம் - இவ்வாறு தாமரை மலரில் தன் அங்கமாகிய பரிவார கணங்களோடு காட்சி அளிக்கும் சிவசூரியப் பெருமானைப் போற்றுகின்றேன்.

सोमं सितं बुधं गौरं गुरुं गोरोचनाद्युतिम् ।
शुक्रं शुक्लं च पूर्वादिदिक्ष्वथाग्न्यादिकोणगान् ॥३ ॥

रक्तं भौमं श्यामदेहं च सौरिं कृष्णं राहुं धूम्रवर्णं च केतुम् ।
वामैर्हस्तैर्नौमि तान् षट् समेतान् वामोरुस्थैर्दक्षिणैः
साभयैश्च ॥४ ॥

अर्धकायोर्ध्वकेशौ च राहुकेतू कृताञ्जली ।
अब्जाभयकरं रक्तं तेजश्चण्डमुपास्महे ॥५ ॥

முத்துப்போன்ற வெண்ணிறச் சந்திரன் : முல்லைப் பூப்போன்ற வெண்ணிற புதன்: கோரோசனை நிறத்து குரு: வெண்மை நிற சுக்கிரன் - இவர்களை முறையே கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளிலும் செந்நிற அங்காரகன் (செவ்வாய்), சியாமள நிற சனைச்சரண்: கிருஷ்ணநிற ராகு: புகை நிற கேது இவர்களை முறையே தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு ஆகிய திசைகளிலும் தியானிக்கிறேன். கூறப்பட்ட இந்த கிரக கணத்தில், சந்திரன், புதன், குரு, சுக்கிரன், செவ்வாய், சனி என்னும் அறுவரையும் இடது தொடையின் மேல் வைத்துள்ள இடதுகையும் அபய முத்திரை காட்டும் வலது கையும் உடையவர்களாகத் தியானிக்கிறேன். பாதி உடம்பை உடையவர்காளகவும், நிமிர்ந்துயர்ந்து சிலிர்த்துள்ள கேசபாரம் உடையவர்களாகவும், அஞ்ஜலி முத்திரை காட்டிக் கூப்பியுள்ள இரண்டு கைகளை உடையவர்களாகவும் ராகுவையும் கேதுவையும் தியானிக்கிறேன்.

இவ்வாறு முறைப்படி இவர்களை தியானித்து வணங்குகிறேன்.

(அர்த்த காயம் : ''சிரோமாத்ரம் ராஹு: சரீர மாத்ரம் கேது'' )

தாமரை ஏந்திய இடதுகை அபயம் காட்டும் வலதுகை செந்நிறத் திருமேனி இப்படிக் காட்சியளிக்கும் தேஜஸ் சண்டரை உபாசிக்கிறேன். (ஆழ்ந்து தியானித்து வணங்குகிறேன்)

## द्वारपूजा

ऊर्ध्वोदुम्बरमुखदक्षिणे निविष्टं श्यामाङ्गं गणपतिमाश्रये
दधानम् ।
वामे लड्डुकपरशुं कराब्जयुग्मे दन्तं च स्वकमपरत्र
चाक्षमालाम् ॥६ ॥

வாயிற்படியின் (துவாரத்தின்) மேற்புறப் பலகையில் (உதும்பரத்தில்) தென்திசையில் விளங்குபவரும். சியாமள நிறத்தினரும். தாமரை போன்ற இடது கரங்கள் இரண்டிலும் லட்டு, பரசு என்பனவற்றை ஏந்தியுள்ளவரும், வலது கரங்களில் தனது தந்தத்தையும் அக்ஷமாலையையும் ஏந்தியுள்ளவரும் ஆகக் காட்சியளிக்கும் கணபதிப் பெருமானைச் சரண் அடைகிறேன்.

ऊर्ध्वोदुम्बरमुखवामतो निविष्टां वन्देऽहं धवलरुचिं सरस्वतीं च ।
वामे पुस्तकमथ दक्षिणे ऽक्षमालां बिभ्राणां करयुगले
वराभये च ॥७ ॥

துவார மேற்கட்டியில் இடது புறத்தில் விளங்குபவளும், வெண்மை நிறத்தினளும். இடது கைகள் இரண்டிலும் வரமுத்திரையையும் புத்தகத்தையும் ஏந்தியுள்ளவளும், வலது கைகள் இரண்டிலும் அபய முத்திரையையும் அக்ஷமாலையையும் கொண்டுள்ளவளுமாகக் காட்சியளிக்கும் ஸரஸ்வதீ தேவியை வணங்கி வந்திக்கிறேன்.

तन्मध्यतः कमलमध्यसुखोपविष्टां
हस्तिद्वयोद्धृतघटाम्बुकृताभिषेकाम् ।
सव्ये वराब्जसहितां महतीं च लक्ष्मीं
वामे तु बिल्वफलपद्मधरां सुपीताम् ॥८ ॥

கணபதிக்கும் ஸரஸ்வதிக்கும் இடையே, துவார மேற்கட்டியின் நடுவில் தாமரைமலரில் சுகாஸனத்தில் விளங்குபவளும், இருபுறங்களிலும் உள்ள யானைகளால் உயர்த்திப் பிடிக்கப்பட்ட கலசங்களிலிருந்து பெருகும் அமுத தாரைகளால் அபிஷேகம் செய்யப்படுபவளும், வலது கரங்களில் தாமரைப் பூவையும் வர முத்திரையையும் கொண்டுள்ளவளும். இடது கரங்களில் பில்வக்கனியையும் தாமரைப் பூவையும் ஏந்தி உள்ளவளும். மகிமை பொருந்தியவளும் வெண்மஞ்சள் நிறத்தினளுமாகக் காட்சியளிக்கும் மஹாலட்சுமியை வணங்குகிறேன்.

शूलाक्षमाले दधतं कराभ्यां वामेतराभ्यां जटिलं त्रिणेत्रम् ।
द्वादक्षिणस्थां समवाप्य शाखां रक्तं स्थितं नन्दिनमाश्रयामि
॥९ ॥

துவாரத்தின் தக்ஷிணசாகையில் துவாரச் சுவரை நன்கு ஒட்டினாற்போல் அமர்ந்து வீற்றிருப்பவரும், வலது கரத்தில் அக்ஷமாலையையும் இடது கரத்தில் சூலத்தையும் கொண்டுள்ளவரும் ஜடாமுடியும், மூன்றுகண்களும் உடையவளும், செந்நிறத் திருமேனி வாய்ந்தவருமான நந்திகேசுவரரைச் சரண் அடைகிறேன்.

तदुत्तरे तत्र निविष्टमूर्तिं गङ्गां च शुक्लां मकराधिरूढाम् ।
हस्तद्वये दक्षिणवामसंस्थे नीलोत्पलं पूर्णघटं वहन्तीम् ॥१० ॥

நந்திகேசுவரருக்கு அருகில் வடக்கு பக்கத்தில் தோற்றம் கொண்டு விளங்குபவளும், வெண்ணிறத்தினளும், மகரமீன்மேல் ஆரோகணித்து இருப்பவளும் வலதுகரத்தில் கருநெய்தல் பூவையும் இடதுகரத்தில் பூர்ண கலசத்தையும் ஏந்தி இருப்பவளுமாகத்திகழும் கங்கா தேவியைச் சரண் அடைகிறேன்.

तद्वामशाखास्थितकृष्णमूर्तिं नागोपवीतं जटिलं सुदंष्ट्रम् ।
कपालशूलान्वितवामसव्यकरं महाकालमहं प्रपद्ये ॥११ ॥

துவாரத்தின் இடது சாகையைச் சார்ந்து இருப்பவரும், கரும்பச்சை நிறத்தினரும், நாகப் பூணூல் அணிந்துள்ளவம் சடைமுடியும் மூன்று கண்களும் கொண்டுள்ளவரும், இடதுகரத்தில் கபாலத்தையும் வலது கரத்தில் சூலத்தையும் ஏந்தியுள்ளவருமாகத் திகழும் மஹாகாள மூர்த்தியை நான் சரண் அடைகிறேன்.

यमुनां दक्षिणे तस्य श्यामां कूर्मस्थितां भजे ।
वामदक्षिणहस्तस्थपूर्णकुम्भासितोत्पलाम् ॥१२ ॥

மஹாகாளருக்கு அருகில் அவரது வலது பக்கத்தில் இருப்பவளும் சாமள நிறத்தினளும் கூர்மத்தின் (ஆமையின்) மேல் ஆரோகணித்து இருப்பவளும் வலதுகையில் நீலோத்பலப் பூவையும் இடதுகையில் பூர்ண கலசத்தையும் ஏந்தியுள்ளவளுமாகத் திகழும் யமுனாதேவியை வணங்கித் துதிக்கிறேன்.

कल्पान्ताग्निप्रभं चास्त्रमथोदुम्बरगं भजे ।
दिव्यान्तरिक्षभूमिष्ठविघ्नसङ्घनिवारकम् ॥१३ ॥

துவாரத்தின் கீழ்ப்படியில் தோற்றம் கொண்டு விளங்குபவரும், கல்ப முடிவில் கிளர்ந்து எழும் காலாக்னி போன்று பேரொளியுடன் திகழ்பவரும், தேவலோகம், அந்தரிக்ஷம், பூமி ஆகிய மூன்று இடங்களிலும் ஏற்படும் இடையூறுகளின் கூட்டத்தை (அதாவது, எண்ணற்ற இடையூறுகளை) விலக்க வல்லவரும் ஆன அஸ்த்ர தேவரை வணங்கித் துதிக்கிறேன்.)

(ஓம் ஹாம் அஸ்த்ராய த்வாரபாலாய நம: அல்லது அஸ்த்ர த்வாரபாலாய நம: என்று கூறி வணங்க வேண்டும் அதோ தும்பரம் = தேஹளி = கீழ்ப்படி)

## ॥वास्तुपतिपूजा ॥

हंसाब्जस्थं तुन्दिलं लम्बकूर्चं गौरं वन्दे युक्तमास्यैश्चतुर्भिः ।
हस्तद्वन्द्वे कुण्डिकां सृक्समेतां वामे ऽन्यस्मिन्साक्षमालं
स्त्रुवं च ॥१४ ॥

அன்னத்தின்மேல் பத்மாஸனத்தில் வீற்றிருப்பவரும்,பெருத்த வயிற்றையும் நான்கு முகங்களையும் உடையவரும், தொங்கும் கூர்ச்சத்தை வைத்திருப்பவரும். பொன்மை கலந்த வெண்மை நிறத்தினரும். இடது கரங்களில் ஸ்ருவத்தையும் ஜபமாலையையும் வலது கரங்களில் குண்டிகையையும் ஸ்ருக்கையும் கொண்டுள்ளவருமாக வாஸ்து பிரம்ம நாதர் விளங்குகிறார்.

तं वास्तुपं निर्ऋतिकोणगतं गणेशं
विघ्नापहं तदनु वायुगमुक्तरूपम् ।
सौम्ये महापदयुतां श्रियमुक्तरूपां
वन्दे स्थितां च गुरुपद्धतिमीशकोणे ॥१५ ॥

மேற்கூறப்பட்டவாறு விளங்கும் வாஸ்து பிரம்மாவையும், தென்மேற்கில் இருப்பவரும், இடையூறுகள் அனைத்தையும் விலக்கி அருள்பவரும் முற்கூறப்பட்ட லக்ஷணங்களோடு கூடிய வடிவத்தை உடையவரும் ஆன கணபதியையும் முற்கூறப்பட்ட வடிவச் சிறப்போடு வடக்கில் விளங்கும் மஹாலக்ஷ்மியையும், வடகிழக்கில் நிலைபெற்றிருக்கும் குருமார்களின் வரிசையையும் வணங்கித் துதிக்கிறேன்.

॥गुरुपद्धतिः॥

सदाशिवमनन्तं च श्रीकण्ठं पुनरम्बिकाम्।
गुहं विष्णुं च धातारं गुरून् सप्त समाश्रये ॥१६॥

ஸதாசிவப்பெருமான். அனந்தேசுவரர், ஸ்ரீகண்டர், சிவாம்பிகை, குகப்பெருமான், விஷ்ணு, பிரம்மா - இவ்வாறு குருவரிசையில் விளங்கும் இந்த ஏழுவரையும் நன்கு பூரணமாகச் சரண் அடைகிறேன்.

॥आसनपूजा॥

आधारशक्तिं क्षीरोदवर्णां बीजाङ्कुराकृतिम्।
सर्वाधारां भजे मध्ये स्थिरां कूर्मशिलास्थिताम् ॥१७॥

சிவ பீடத்தின் கீழே நடுவில் விளங்குபவள் ஆதாரசக்தி: அவள் பால் போன்ற வெண்மை நிறம் உடையவள்: சிரசில், விதையிலிருந்து வெளிப்பட்டுள்ள முளை (அங்குரம்) வடிவான இலச்சினையை உடையவள். ஸ்திர ஆசனமான கூர்ம சிலையின் நடுவில் தோற்றம் கொண்டு விளங்குபவள். அனைத்திற்கும் ஆதாரமாக விளங்கும் இத்தகைய ஆதார சக்தியைத் துதிக்கிறேன்.

प्रपञ्चव्यापितो ब्रह्मशिलास्थं मन्त्रनायकम् ।
मायापद्मासनं श्वेतमनन्तं प्रणमाम्यहम् ॥१८ ॥

பிரபஞ்சம் முழுவதையும் வியாபித்து விளங்குவதான பிரம்ம சிலையையும் அதில் சாந்நித்தியம் கொண்டுள்ள மந்திர நாயகரையும் வெண்ணிறம் வாய்ந்ததும் மாயை மயமானதும் ஆன பத்மாஸனத்தையும் (சிவபீடத்தையும்) அந்த ஆஸனத்தின் கீழ்ப்பகுதியில் விளங்கும் அனந்தாஸனத்தையும் தியானித்து வணங்குகிறேன்.

(மாயாபத்மம் = க்ஷுப்தமாயை எனப்பட்டு, பிருதிவீ தத்துவம் முதல் கலா தத்துவம் வரை உள்ள 31 தத்துவங்களைக் கொண்டுள்ளதாக வெண்மை நிறத்தில் விளங்கும் தாமரைப் பீடம் : சிவபீடம்)

धर्मज्ञाने श्वेतरक्ते सुपीतं वैराग्यं चैश्वर्यमीडे ऽतिकृष्णं ।
सिंहकारानन्तसामर्थ्यरूपान्शम्भोः पीठेऽग्न्यादिकोणस्थ-
पादान् ॥१९ ॥

சிவபீடத்தின் தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு ஆகிய நான்கு மூலைகளிலும் முறையே க்ருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் கலியுகம் எனும் நான்கும் அனந்தனின் சாமர்த்ய ரூபங்களான நான்கு சிம்ம வடிவங்களாகி தருமம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம் எனும் பெயர்களுடன் திகழ்கின்றன. அக்னி திக்கில் வெண்ணிற தருமம்: நிருதியில் செந்நிற ஞானம் வாயு திக்கில் பீதநிற (வெண்மஞ்சள்) வைராக்கியம்: ஈசானத்தில் கிருஷ்ணநிற ஐசுவரியம். இவ்வாறு விளங்கும் நான்கு பாதங்களையும் (சிம்மாஸனபாதம்) போற்றித் துதிக்கிறேன்.

(பாதங்களாக விளங்குபவை, உண்மையில் நான்கு யுகங்களே. சதுர்யுக மஹாபாதம் என்று கிரணாகமம் கூறுகிறது. புத்திதத்துவத்தின் பாவப் பிரத்யயங்களான தர்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவாரியம், அதர்மம்,

அஞ்ஞானம், அவைராக்கியம், அனைசுவரியம் எனும் எட்டையும் அதிஷ்டித்து விளங்கும் சக்திகளே அனந்தனின் சாமர்த்திய ரூபங்கள் எனப்படுகின்றன. (அதிசய வீர்யம் வாய்ந்த காரணத்தால் சிம்ம ரூபங்களாகப் பாவிக்கப்படுகின்றன அனந்தன் ஆயிரம் படம் உடைய நாகம்).

कृष्णं श्वेतं श्वेतरक्तं द्वितीयं रक्तं पीतं पीतकृष्णं क्रमेण।
चत्वार्यस्मिन् गात्रकाणीशपीठे पूर्वाद्याशासंस्थितानि
प्रपञ्चे ॥२०॥

அதர்மம் என்பது கிழக்கு திக்கில் கிருஷ்ண நிறமும் வெண்மையும் கலந்த சிம்மமாக விளங்குகிறது, அஞ்ஞானம் என்பது தெற்கில் வெண்மையும் செம்மையும் கலந்த சிம்மமாக விளங்குகிறது. மேற்கில் அவைராக்கியம் என்பது செம்மையும் பீத நிறமும் கலந்த சிம்மமாகத் திகழ்கிறது. வடக்கில் அனைசுவரியம் என்பது பீதமும் கிருஷ்ணமும் கலந்த சிம்மமாகத் திகழ்கிறது. சிவபீடத்தில் இவ்வாறு நான்கு திசைகளிலும் விளங்கும் சிம்ம காத்திரங்களை சரண் அடைகிறேன்.

( விதிக்குகளில் சிம்மத்தின் பாதங்கள் திக்குகளில் சிம்மங்களின் உடல்கள் காத்திரம்)

मायाधश्छदनं रक्तं विद्योर्ध्वच्छदनं सितम्।
प्रणमामि क्रमान्त्यस्य निर्ऋतीशानकोणयोः ॥२१॥

தாமரைப் பீடத்தின் எட்டு இதழ்களுக்குக் கீழே தாமரைத்தண்டு கூடும் இடத்தில் நிர்ருதியில் அசுத்த மாயாதத்துவ மயமான கீழ் முடிச்சு உள்ளது. ஈசான திக்கில் சுத்த வித்யாதத்துவ நிலைக்குக் கீழே மேல் முடிச்சு உள்ளது. இந்த இரண்டு முடிச்சுகளும் தத்துவப்பின்னணியில் பூஜிக்கத் தகுந்தவை. இவற்றை நான் வணங்குகிறேன்.

शुद्धविद्यामयं पद्मं विद्येश्वरदलाष्टकम्।
पीतां च कर्णिकां वन्दे पञ्चाशद्बीजगर्भिताम्॥२२॥

சுத்தவித்யை மயமான தாமரைப் பூவையும், அஷ்ட வித்யேசுவர்களுக்கு உடைய எட்டு இதழ்களையும், வெண் மஞ்சள் நிறமுள்ள கர்ணிகையையும். அதன் நடுவில் பொதிந்து விளங்கும் ஐம்பது மாத்ருகாக்ஷர வடிவான பீஜங்களையும் (விதைகளையும்) தியானித்து வணங்குகிறேன்.

அகாரம் முதலான உயிரெழுத்துகள் 16: க, ச, ட, த, ப வர்கம் 25: ய காரம் முதல் க்ஷகாரம் வரை 9 (ஹகாரம் நீங்கலாக) - இந்த ஐம்பது எழுத்துகளும் கர்ணிகை நடுவில் பீஜங்களாக விளங்குகின்றன)

वरप्रदेशाङ्कितवामहस्तं सव्यद्विहस्ताभयचामरं च।
रक्तं जटाचूडशशाङ्करेखं विभूषणैर्भूषितविश्वगात्रम्॥२३॥

வரத முத்திரையைத் தாங்கும் இடதுகையும் சிம்மாசனத்தைத் தொடுவதாக ஊருவின் பக்கம் உள்ள மற்றோர் இடதுகையும், அபயமுத்திரைகாட்டும் வலதுகையும் சாமரம் ஏந்தியுள்ள மற்றொரு வலதுகையும் உடையவர்களாகவும் செந்நிறம் வாய்ந்தவர்களாகவும் இளம்பிறை சேர்ந்துள்ள ஜடாபாரம் உடையவர்களாகவும், சிறந்த ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள ஸர்வலக்ஷணமயமான திருமேனி உடையவர்களாகவும் கிழக்கு முதல் ஈசானம் வரை எட்டு திசைகளிலும் கேஸரங்ளைச் சார்ந்து விளங்குபவர்களுமான வாமை, ஜியேஷ்டை, ரௌத்ரி, காள, கலவிகரிணி, பலவிகரிணி பலப்ரமதினி,ஸர்வபூத தமனி எனப்படும் எட்டு சக்திகளையும் நன்கு நமஸ்கரிக்கிறேன்.

(வாமை முதலான எட்டு சக்திகளும் உண்மையில் சிவசக்தியின் பேதங்களே)

पूर्वादिदिक्केसरपूज्यमानं वामादिशक्त्यष्टकमानतोऽस्मि।
तत्तुल्यरूपामथ कर्णिकायां मनोन्मनीं शुक्लतनुं निविष्टाम्॥२४॥

கர்ணிகையின் நடுவில், முற்கூறப்பட்ட ரூப லக்ஷணங்கள் வாய்ந்தவளாகவும், வெண்ணிறத் திருமேனி உடையவளாகவும் சான்னித்யம் கொண்டுள்ள மனோன்மனி சக்தியை வணங்குகிறேன்.

(வாமாதி நவ சக்திகளின் மனோன்மனி சக்தி மட்டும் வெண்மை நிறம் வாமை முதலான ஏனைய எட்டு சக்திகளும் செம்மை நிறம். மனோன்மனி அதிஷ்டாத்ரு என்பதால் வெண்மை வாமை முதலானோர் அதிஷ்டேயர்கள் என்பதால் செம்மை)

मण्डलत्रितयं वन्दे सूर्यसोमहविर्भुजाम् ।
वक्ष्यमाणाकृतीन् ब्रह्मविष्णुरुद्रांश्च तत्पतीन् ॥२५॥

தாமரை இதழ்களின் நுனி பாகத்தில் பீத நிற ஸூர்ய மண்டலமும், கேஸரங்களின் நுனி பாகத்தில் வெண்ணிற ஸோம மண்டலமும் (ஸோமம் - சந்திரன்) கர்ணிகையின் நுனியில் செந்நிற அக்னி மண்டலமும் திகழ்கின்றன. ஆகமங்களில் வருணித்துக் கூறப்பட்ட ரூப லக்ஷணம் உடையவர்களாய், இம் மூன்று மண்டலங்களுக்கும் முறையே பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் எனும் மூவரும் அதிபதிகளாக உள்ளனர். இவ்வாறு உள்ள மூன்று மண்டலங்களையும் வந்திக்கிறேன். அதிபர்களையும் வணங்குகிறேன்.

तदन्तः संस्थितं शम्भोः शक्तिमण्डलमद्भुतम् ।
तत्पतिं कारणेशानमहं वन्दे महेश्वरम् ॥२६॥

முற்கூறப்பட்ட மூன்று மண்டலங்களுக்கும் அப்பால் உள்ளே பரமேசுவரனின் சக்திமயமான சக்தி மண்லம் வெளிப்பட்டு உள்ளது. அதனையும் அதற்கு அதிபதியாக விளங்கும் காரணேசுவரரான மஹேசுவரனையும் வணங்கித் துதிக்கிறேன்.

क्षित्यादिकुटिलाप्रान्तसमस्ताध्वमयं शुभम् ।
योगपीठमिदं दिव्यं शिवस्यासनमाश्रये ॥२७॥

பிருதிவீ தத்துவம் முதல் குடிலை எனப்படும் சிவதத்துவம் வரை (முப்பத்தாறு தத்துவங்களின் எல்லை வரையிலும்) வியாபித்துள்ளதும் வர்ணம், பதம் மந்திரம், புவனம், தத்துவம், கலை எனும் ஆறு அத்வாக்களின் மயமாக விளங்குவதும், சுபகரமானதும் சிவ-சக்தி ஐக்கிய நிலைக்குரிய பீடமாக விளங்குவதும் ஆன இந்த தேஜோமயமான சிவாஸனத்தை பக்திபூர்வமாகச் சரண் அடைகிறேன்.

(இங்கே யோகபீடம் என்பதற்கு யோகாஸனம் எனப் பொருள் கொள்ளக் கூடாது. சிவ-சக்தி ஐக்கிய நிலைக்குரிய உயர்ந்த ஸ்தானமாகிய பீடம் எனப் பொருள் கொள்ள வேண்டும்)

॥सदाशिवः॥

तत्रासीनं स्फटिकसदृशश्रीमदागुल्फगात्रं
ब्रह्मोत्थाष्टान्वितमनुकलात्रिंशदारब्धमूर्तिम् ।
प्रत्यक् श्वेतं वदनमरुणं चोत्तरं कृष्णवर्णं
याम्यं पूर्वं कनकरुचिरं शुल्कमूर्ध्वं दधानम् ॥२८॥

முற்கூறப்பட்ட ஷடத்வ மயமான, தேஜோமயமான திவ்ய சிவாசனத்தில் (தாமரையின் நடுவில்) வெளிப்பட்டு வீற்றிருப்பவரும், சுத்த ஸ்படிகம் போன்று நிர்மலமான தோற்றம் உடையவரும், பாதம் முதல் சிரசு வரை சுப சோபமான ஸௌந்தர்யத்துடன் விளங்கும் திருமேனியை உடையவரும், ஈசானம் முதலான பஞ்ச பிரம்ம மந்திரங்களோடு தொடர்புடைய முப்பத்தெட்டு கலாமந்திரங்களால் ஆன உருவத்தை உடையவரும் ஆக விளங்கும் சதாசிவப் பெருமானை தியானிக்கிறேன். மேற்கில் வெண்ணிற (சுவேத)

முகம், வடக்கில் செந்நிற முகம, தெற்கில் கிருஷ்ண நிற முகம். கிழக்கில் பொன்வண்ண முகம். மேல் நோக்கிய வெண்ணிற (சுக்லநிற) முகம் - என அவர் கொண்டுள்ள ஐந்து திரு முகங்களையும் தியானிக்கிறேன்.

रक्तपादकराम्भोजं प्रतिवक्रं त्रिलोचनम् ।
ज्ञानचन्द्रकलाचूडं बद्धपद्मासनं शिवम् ॥२९॥

செந்நிறமான திருவடிகள் ; செந்நிறமான தாமரை போன்ற கைகள் ; ஒவ்வொரு திருமுகத்திலும் மூன்று கண்கள் - இவற்றை உடையவராகவும், ஞானக்கலை மயமான இளம்பிறையைச் சடையில் சூடியுள்ளவராகவும், நன்கு அமைத்துக் கொள்ளப்பட்ட பத்மாஸனத்தில் வீற்றிருப்பராகவும், விளங்கும் ஸதா சிவப் பெருமானை ஆழ்ந்து தியானிக்கிறேன்.

सुप्रसन्नं स्मितोपेतं जटामकुटधारिणम् ।
षोडशाब्दवपुर्लक्ष्यं द्वात्रिंशल्लक्षणान्वितम् ॥३०॥

ஸ்வாத்மா ராமராக இருந்து கொண்டு எப்பொழுதும் தெளிவான பொலிவுடன் ஸௌம்யராகவும் புன்சிரிப்புடனும் விளங்குபவரும். ஜடா மகுடம் தரித்துக் கொண்டிருப்பவரும் என்றும் இளையோனாகப் பதினாறு வயதுடன் விளங்குபவரும் பூரணமான ஆனந்த மூர்த்திக்கு வரையறுத்துக் கூறப்படும் முப்பத்திரண்டு லக்ஷணங்களைப் பரிபூரணமாகப் பெற்றிருப்பவருமான சிவ பெருமானை வணங்கித் துதிக்கிறேன்.

முப்பத்து இரண்டு லக்ஷணங்கள் : 32

தீர்க்கமாக, நீண்டு திகழ வேண்டியவை :
கைகள், கண்கள், மூக்கு, ஸ்தனமத்தியம், முழங்கால்கள் (5)

குறுகி இருக்க வேண்டியவை:
கழுத்து,கணுக்கால்,முதுகு, குறி (4)

மிருதுவாக இருக்க வேண்டியவை :
நகம், தோல், கூந்தல், பற்கள் விரல்களின் கணு (5)

உயர்ந்து திகழ வேண்டியவை :
வயிறு, பிடரி, தோள்கள், மூக்கு, மார்பு, நெற்றி (6)

சிவந்து திகழ வேண்டியவை :
கண்கள், உதடு, மோவாய், உள்ளங்கால், உள்ளங்கை, நகம், பீஜம் (7)

வலிமையுடன் திகழ வேண்டியவை :
முஷ்டி, மணிக்கட்டு, மார்பு (3)

விசாலமாகத் திகழ வேண்டியவை :
நெற்றி, மார்பு (2)

முப்பத்து இரண்டு லக்ஷணங்களை ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளும் திருக்கயிலாசமலைப் பதிகத்தில் ஒரு பாடலில் தொகுத்துப் பாடுகின்றார் :

"அங்கமது பழுதென்ன உருமாறி எச்செயலும்
அற்றவரை யொப்பவருவார்
ஐந்துதலம் நீண்டுமற்றைந்துதலம் மிருதுவாய்
ஆறிடம் உயர்ந்து செவ்வி
தங்கவோர் ஏழிடம் சிந்தூரம் போல் நிறம்
தர, இரண்டொன்று குறுகிச்
சாருமொரு மூவிடம் விசாலமா மூன்றிடம்
தாழ, லட்சணமதாக
எங்கும் வருவார் ஏதும் அறிகிலார் போலவும்
இருப்பார்கள் யாவும் அறைவார்
இதயத்தில் அன்பிலா எருமைகட்கு அருள்செயார்
இதமானவர்க்கு அருளுவார்
செங்கமல பாதமுருகைய நின் அன்பரவர்
தெரிசனம் எனக்கும் எங்ஙனோ
திருநீரு பதியாய கயிலாச மலைமேவு
சிவஞான குருசாமியே"

(சாந்தம் பத்மாஸனஸ்தம் சசிதர மகுடம் பஞ்சவக்த்ரம் த்ரிணேத்ரம் சூலம் வஜ்ரம் ச கட்கம் பரசுமபயதம் ஸவ்யபாகே வஹந்தம் நாகம் பாசம் ச கண்டாம் அனலகரயுதம் ஸாங்குசம் வாமபாகே நாநாலங்கார யுக்தம் ஸ்படிகமணிநிபம் நௌமி ஸாதாக்ய தத்வம்.

எப்பொழுதும் சாந்தமே வடிவானவர் : பத்மாஸனத்தில் வீற்றிருப்பவர் இளம்பிறை சூடிய ஜடாமகுடம் உடையவர் ஐந்து திருமுகங்களும் ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்களும் உடையவர் வலது கரங்களில் சூலம், வஜ்ரம், கட்கம், பரசு, அபய முத்ரை ஆகியவற்றைக் கொண்டுள்ளவர் இடது கரங்களில் நாகம், பாசம் மணி, நெருப்பு, அங்குசம் ஆகியவற்றைக் கொண்டுள்ளவர் ஒளியும் மணமும் பரப்பும் பற்பல அலங்காரங்ளோடு கூடியவர் சுத்தமான படிகம் போன்ற நிறத்தினர் - இவ்வாறு சாதாக்ய தத்வத்தில் வெளிப்பட்டு விளங்கும் சதாசிவப் பெருமானை வணங்குகிறேன்.)

वामैः खेटं चापयुक्तं कपालं बिभ्राणं वा कुण्डिकां चाभयं च ।
वन्दे खड्गं बाणखट्वाङ्गयुक्तं हस्तैरन्यैरक्षमालां वरं च ॥३१॥

கேடயம், வில், கபாலம், குண்டிகை, அபயமுத்திரை - இவற்றை இடதுகரங்களில் கொண்டுள்ளவரும், கட்கம், அம்பு, கட்வாங்கம், அக்ஷமாலை, வர முத்திரை - இவற்றை வலது கரங்களில் கொண்டுள்ளவருமான ஸதாசிவ மூர்த்தியை நன்கு தியானிக்கிறேன்.

वामेतरेषु निजपाणितलेषु यद्वानागाक्षसूत्रडमरूत्पलबीजपूरैः ।
खट्वाङ्गशूलवरशक्त्यभयैश्च भक्त्या वन्दामहे वरतनुं -
सकलस्वरूपम् ॥ ३२ ॥

தமது இடது கரங்களிலும் வலது கரங்களிலுமாக நாகம். அக்ஷமாலை, டமரு, உத்பலம், மாதுளம்பழம், கட்வாங்கம், சூலம், வரமுத்திரை, சக்தி ஆயுதம், அபயமுத்திரை என்னும் இவற்றைக் கொண்டு மற்றொரு வகையிலும் காட்சி அளிப்பரும், மிகவும் சிறந்ததான திருமேனியை உடையவரும் ஆக இவ்வாறு ஸகள வடிவத்தில் விளங்கும் சதாசிவப் பெருமானை வணங்கித் துதிக்கிறேன்.

सर्वज्ञं सर्वकर्तारं सर्वानुग्राहकं परम् ।
अनादिपाशरहितं निष्कलं चाविकारिणम् ॥३३ ॥

அனைத்தையும் அறிபவராகவும், அனைத்தையும் அறியவைப் பவராகவும் அனைத்தையும் செய்பவராகவும் அனைத்தையும் செய்ய வைப்பவராகவும் அனைத்திற்கும் எப்பொழுதும் அருள் புரிபவராகவும், சிறந்தனவற்றிற்கெல்லாம் மேலாகச் சிறந்து விளங்குபவராகவும், இயல்பாகவே எப்பொழுதும் பாசத் தளைகளிலிருந்து நீங்கியவராகவும் நாமமும் ரூபமும் அற்ற நிட்களமாகவும், உலகக் கிருத்தியங்கள் எவற்றிலும் எந்தவித மாற்றத்திற்கும் உட்படாதவராகவும் சதாசிவப் பெருமானின் இருதயத்தில் விளங்கும் ஸச்சிதானந்த அத்வாதீத பரசிவத்தை தியானிக்கிறேன்.

सृष्टिस्थितिप्रलयरक्षणनामधेयैः
कृत्यैः पशोर्मलमलं परिपाच्य मोक्षम् ।
दीक्षात्मकेन करणेन कृपाम्बुराशे
पाशत्रयात् पशुपते कृपया करोषि ॥३४ ॥

கருணைக்கடலாக விளங்கும் பெருமானே! ஆன்மக் கூட்டங்களின் தனிப்பெரும் தலைவனே! படைத்தல்,

காத்தல், ஒடுக்குதல், மறைத்தல், அருளல் எனக் கூறப்படும் ஐந்தொழில்களாலும் உயிர்களைப் பந்தித்துள்ள ஆணவ-மலத்தை சத்திநிபாதம் நிகழ்தற்கேற்ற வகையில் பக்குவம் அடையச் செய்து, தீக்ஷை எனப்படும் ஞானாத்மகமான ஸம்ஸ்காரம் எனும் சிவகரணச் செயலால், ஆணவம் கன்மம் மாயை எனப்படும் மூவகைத்தளைகளிலிருந்தும் உனது கருணையால் விடுவித்து உனது நிலையை நின் கருணையால் அளித்து அருள்கிறாய்.

(ரக்ஷணம் = திரோபவம், அனுக்ரஹம் எனும் இரண்டையும் குறிக்கும் ரக்ஷணத்திற்காகவே திரோபவம் செய்யப்படுகிறது)

विहितसलिलभस्मस्नानसन्ध्याप्रणामाः
कृतदिनकरपूजाः पञ्च शुद्धीर्विधाय ।
विधिवदिह यजन्ते दीक्षिता ये नरास्त्वां
प्रदिशसि शिव तेभ्यो विघ्नहीनां विमुक्तिम् ॥३५॥

சிவபெருமானே! ஆகம நூல்களில் விதிக்கப்பட்டுள்ள வண்ணம் புனிதநீரால் நீராடியும் விபூதிஸ்நானம் செய்தும், முறைப்படி விபூதி அணிந்தும் வைதிக சந்தி, சைவ சந்தி எனும் இரண்டு சந்திவழிபாடுகளைச் செய்தும் பூதசுத்தி முதலான ஐவகைத் தூய்மைகளை முறைப்படி நிறைவேற்றியும் உத்தமமான சிவதீக்ஷை பெற்ற எந்த அடியார்கள் உன்னை இங்கே ஆகம விதிப்படி பூஜைசெய்து போற்றுகின்றார்களோ அவர்களுக்கு, மீண்டும் பிறத்தல் எனும் தளையிலிருந்து நீங்கியதாகிய விசேஷமான முத்திப் பேற்றை - சாயுச்சிய நிலையை - அளித்து அருள்கிறாய்!

ये चात्र शुद्धभुवनोद्भवभोगकामाः
त्वामर्चयन्ति विविधैर्यजनप्रकारैः ।

तेभ्यः प्रदाय परमेश्वर साधकेभ्यो
भोगान् ददासि तदनन्तरमेव मोक्षम् ॥३६॥

பரமேசுவரப் பெருமானே! தீக்ஷை பெற்ற எந்த ஸாதகர்கள் (அடியார்கள்), சுத்த அத்துவாவில் உள்ள புவனங்களில் தோன்றித் திரண்டுள்ள போகங்களை அனுபவிக்க விரும்பியவர்களாய் வெவ்வேறு வகைப்பட்ட பூஜை முறைகளாலும் வேள்விகளாலும் உன்னை நன்கு வழிபடுகின்றார்களோ, அத்தகைய ஸாதகர்களுக்கு அவர்கள் விரும்பிய போகப் பேறுகளை மிகுதியாக அனுக்கிரகித்து அருள்கிறாய், போகப் பேறுகளை அனுபவித்ததும், அந்த அனுபவ நிறைவில் அவர்களுக்கு நிலையான மோக்ஷப் பேற்றையும் அருள்கிறாய்.

" (வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட என நக்கீரர் கூறுவது போன்றும்)" "(அடியவர் இச்சையில் எவைஎவை உற்றன அவைதருவித்தருள் பெருமாளே என அருணகிரிப் பெருமான் கூறுவது போன்றும் அடியார்கள் வேண்டிய பேறுகள் அனைத்தையும் சிவபெருமான் தாராளமாக வழங்கவல்லவன் அவர்களுக்கு அவசியம் என்ன தேவையோ அதனை அவர்கள் வேண்டாமலேயே தானே முன்வந்து முற்பட்டு அருள்வதிலும் சிவனுக்கு நிகர் சிவனே)"

ये चैहिकानि हृदयामयरोगशान्ति
शून्यानि यानि विविधानि फलानि लब्धुम् ।
वाञ्छन्ति तानि सकलानि विधाय तेषाम्
आदेहपातमथ नाथ करोषि मोक्षम् ॥३७॥

ஆன்ம நாயகனே ! தீக்ஷை பெற்ற எந்த ஸாதர்கள், இவ்வுலகில் இப்பிறவியில் நற்பேறுகளை விரும்பியும். உள்ளத்திலும் உடலிலும் இடம் பெறும் அசுத்தம், ரோகம் முதலானவற்றைப் போக்கிக் கொள்ள விரும்பியும் மற்றும் அனேக விதமான

பேறுகளையும் ஐசுவரியங்களையும் பெற விரும்பியும் உன்னை முறைப்படி வழிபடுகின்றனரோ அவர்களுக்கு அவரவர் விரும்பிய வண்ணம் அனைத்தையும் உடனே அனுக்கிரகித்து, தேக இறுதியில் (தேகம் நீங்கிய பிறகு) அவர்களுக்கு வீடுபேற்றையும் அளித்து அருள்கிறாய்.

शैवज्ञानमथाभिषेकसहिता दीक्षा हि मोक्षप्रदा
पूज्याद्यैस्तव पूजनोपकरणं हृद्रोगनिर्नाशनम् ।
भक्तिर्भक्तजने गृहे निरुपमा स्फीता च लक्ष्मीर्भवेद्
यत्स्यात् त्वत्पदसेवितान्न सुलभं किं तत् -
कृपाम्भोनिधे ॥३८ ॥

சிவஞான பலத்தோடு கூடியதாய் ஆசார்யபிஷேகம் வரையிலும் செய்யப்படும் உன்னதமான சிவதீக்ஷை அன்றே மோக்ஷம் அளிக்க வல்லது! உனக்குச் செய்யப்படும் சிவபூஜையாலும் பூஜைக்கு அனுகுணமான பல்வேறு ஆசாரங்களாலும் அனுஷ்டானங்களாலும் விரதங்களாலும் உள்ளத்துள்ள ஆணவமலம் எனும் நோயானது அடியோடு அழிக்கப்படுகின்றது. அவ்வாறு சிரத்தையுடன் வழிபாடு செய்யும் அடியார்களிடம் பக்தி திடப்பட்டுவிடுகிறது. அவர்களது இல்லங்களில் ஈடு இணையற்ற செல்வப்பேறுகள் மிகுதியாகப் பெருகிக் கொழிக்கின்றன. உனது திருவடிகளை வழிபடும் அடியார்களால் எளிதிலேயே நன்கு அடைய முடியாதது என ஒன்றும் இல்லை. (அவர்கள் விரும்பிய போகங்கள் அனைத்தும் மிக எளிதாகவே அவர்கட்கு வாய்த்து விடும்)

(இது மிகவும் முக்கியமான சுலோகம் : ஸ்ரீமத் அகோர சிவாசாரியார் '' ஞானத்தோடு கூடிய தீக்ஷை; தீக்ஷையாலேயே மோக்ஷம்'' எனும் கோட்பாடு உடையவர். தீக்ஷையால் ஞானம் ஞானத்தாலேயே மோக்ஷம் என்பது மற்றொரு சாராரின் கொள்கை தமிழில் சைவ சித்தாந்தம் பயில்வோர் பலர் அகோர

சிவாசாரியாரின் கருத்தை ஏற்றுக் கொள்வதில்லை பலர் தீக்ஷையே வேண்டாம் பக்தியே போதும் என்றும் கூறி வருகின்றனர். ஆழ்ந்து சிந்தித்தால் அகோர சிவாசாரியாரின் கோட்பாடே மிகவும் பொருத்தமானது என்றும் சிறப்புடையது என்றும் தெரிய வரும்.

ஞானம் அடைவது என்பது நூற்பயிற்சியால் வருவது அபரஞானம், ஆனால் அந்த ஞானம் நமது ஆன்ம அனுபவத்துக்கு உட்பட வேண்டுமானால் சிவ ஆராதனை அவசியம். பரிபூரணமான சிவ ஆராதனை செய்ய வேண்டுமேல் தீக்ஷை அவசியம். உரிய முறைப்படி சிவதீக்ஷை பெற்று சிவ பூஜை செய்யும் அடியார்களுக்கு மட்டுமே சிவஞானப் பேற்றை ஆன்ம பூர்வமாக நன்கு அனுபவிக்க முடியும் அந்த ஞான அனுபவத்தின் எல்லை சிவ சாயுச்சியம். எனவேதான் '*'தீக்ஷா ஹி மோக்ஷ ப்ரதா''* என அகோர சிவாசாரியார் கூறுகிறார்.)

यत्कर्म नाथ मम जातमबुद्धिपूर्वं
दीक्षोत्तरं विचरतो विहितेतरं स्यात्।
तत्सर्वमेव भवतः स्मृतिमात्ररुद्धं
क्रव्यादयोनिसमवाप्तिफलं न भूयात्॥३९॥

ஆன்ம நாயகனே ! தீக்ஷை பெற்றுக் கொண்ட பிறகு, என் அறியாமை காரணமாகவோ, மறதி முதலான தோஷங்களாலோ, புத்தியில்லாமல் என்னால் செய்யப்பட்டுவிட்ட அபசார மயமானவையும் குற்றம் மிகுந்தவையாகவும் உள்ள செயல்கள் எவை எவை உண்டோ அவற்றால் நேரும் தீய விளைவுகள் அனைத்தும் உன்னை நினைத்த மாத்திரத்திலேயே நீக்கப்பட்டுவிடுகின்றன. இவ்வாறு அபசாரமான காரியங்களைச் செய்வதால் நேரும் பிசாசு ஜென்மம் எடுத்தல் என்பது முதலான கர்ம பலன்கள் தீக்ஷிக்கப்பட்டவர்களாய் உன்னை

எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்கும் அடியார்க்கு ஏற்படுவதில்லை.

(தீக்ஷை பெற்றுக் கொண்டவர்கள், சிவ அபராதமான செயல்களைச் செய்தாலோ சமயாசார நடைமுறைகளைப் புறக்கணித்தாலே அவர்களுக்கு பிசாசு வேதாளம் முதலான ஜன்மங்கள் நேரும். ஆனால் நம்மையும் மீறி நமக்குத் தெரியாமல் சூழ்நிலை காரணமாக நேர்ந்துவிடும் தோஷங்களை சிவ நாம ஸ்மரணம் போக்கிவிடும்).

आदेहपातमिह मे ऽभिमतार्थसिद्धिः
भूयान्महेश हृदयामयनाशनं च ।
प्रारब्धदेहसहकारिमलांशनाशादन्ते
च विघ्नरहितः परमोक्षलाभः ॥ ४० ॥

மகேசுவரப் பெருமானே! என் உடல் நீங்கும் தருணம் வரையிலும் நான் வேண்டிய பேறுகள் அனைத்தும் எனக்கு உனது அருளால் பரிபூரணமாகக் கிடைக்கட்டும்; எனது உயிரைப்பந்தித்துள்ள அறியாமையாகிய நோயும் அடியோடு விலகி அழியட்டும். பிராரப்த வினை நிமித்தமாக இருக்கும். இந்த உடலுக்கு உடன்வரும் துணையாக விளங்கும் ஆணவ மலமும், ஆணவமலத்தின் காரியங்களும் அழிவதால் இறுதியில் எல்லாம் இடையூறுகளும் விலகப்பெற்று மேலானதாகிய சிவசாயுச்சியம் எனும் வீடுபேறும் எனக்குள் கிடைப்பதாக.

अव्यक्ताख्ये व्यक्तरूपे ऽथ लिङ्गे
व्यक्ताव्यक्ते स्थण्डिले वार्चयन्ति ।-
ये त्वां नित्यं नाथ तेषां ध्रुवं स्यात्
पाशप्रोतात् पातकेभ्यश्च मुक्तिः ॥४१ ॥

உருவலக்ஷணம் எதுவும் வெளிப்படாத அவ்யகத்தலிங்க வடிவிலாயினும் உருவ லக்ஷணங்கள் தாளமானப்படி

வெளிப்பட்டுள்ள தெய்வ மூர்த்தமாகிய வ்யகதலிங்க வடிவிலாயினும் முகலிங்கம் என்பதாகிய வ்யக்தாவயக்த வடிவிலாயினும் ஸதண்டிலத்திலேனும் எவர்கள் உன்னை தியானித்து பூஜித்து வழிபடுகிறார்களோ, ஆன்மநாயகனே! அவர்களுக்கு பாசக் கூட்டங்களிலிருந்தும் மஹாபாதகம் உப பாதகம் என்பனவாகச்சொல்லப்படும் தீயவினைப்பயன்-களிலிருந்தும் விடுதலை ஏற்படும் என்பது உறுதி.

मूर्ध्नोरसा करयुगेन पदद्वयेन
वाचा दृशा विमलया मनसा च बुद्ध्या ।
विद्येश्वरादिनिखिलात्मगणाभिराध्यं
तं त्वामहं स्तुतिपदैः प्रणतोऽस्मि भक्त्या ॥४२॥

சிரசு, மார்பு, இரண்டு கைகள், இரண்டு கால்கள், வாக்கு, கண்கள், தூய்மையாகத்திகழும் மனம், புத்தி - இந்த எட்ட அங்கங்களாலும் அஷ்ட வித்யோசுவரர்கள் முதலானவர்-களையும், சிவ ரூபமாகிய அனைத்து விதமான உனது கணங்களாலும் நன்கு பூஜித்து வணங்கப்படும் பெருமைக்குரிய உன்னையும் நான் தோத்திர வசனங்களைக் கூறிப் பக்தியுடன் வணங்குகிறேன்.

ज्ञानक्रियेच्छाप्रमुखैरनन्तैर्भेदैरुपेतामुपचारयुक्त्या ।
सृष्ट्यादिकृत्येषु कृपाम्बुराशेः शक्तिं विभोः शक्तिमतः
प्रपद्ये ॥४३॥

ஞானம், இச்சை, கிரியை முதலாகச் சொல்லப்படுபவையும் முக்கியமானவைகளும் எண்ணிக்கை அற்றவையும் ஆக விளங்கும் சக்தி பேதங்கள் அனைத்தும் காரிய நிமித்தம் உபசாரமாகத் திகழ்பவையே. அவை அனைத்தும் உண்மையில் ஏகமாக உள்ள சிவசக்தியின் வடிவங்களே. கருணைக்கடலாக விளங்கும் உனது படைத்தல் முதலான

பிரபஞ்ச காரியங்களில் அனுசரணையாக விளங்கும் சிவசக்தியையும் எங்கும் வியாபித்துள்ள சக்திமானாக விளங்குவதால் சக்திமத் எனப்படும் சிவத்தையும் நான் சரண் அடைகிறேன்.

या देशिकाङ्गस्थितविश्वनाथव्यापारहस्ताग्निविभक्तरूपा ।
छिनत्ति पाशानखिलान् पशूनां तां शक्तिमाद्यां शरणं
व्रजामि ॥४४ ॥

எந்தச் சக்தி குருநாதரின் திருமேனியில் பதிந்து இருக்கை கொண்டுள்ளதோ எந்தச் சக்தி புவனங்கள் அனைத்துக்கும் தலைவனான சிவபெருமானின் பிரபஞ்சநிமித்தமான செயல்கள் அனைத்திலும் சிவபெருமானின் கை, முகம், மார்பு முதலான அங்கங்களாக மந்திர ரூபமாகப் பதிந்து உள்ளாளோ, எந்தச் சக்தி தனது கருணையால் உயிர்க் கூட்டங்களின் பாசத் தளைகளையெல்லாம் அறுத்து எறிகின்றாளோ, அந்த ஆத்யா சக்தியை நான் சரண் அடைகிறேன்.

केचिद्वदन्ति भवतीमिह शैलकन्याम्
अन्येऽपि वाचमपरे कमलां मुनीन्द्राः ।
एके पुनः प्रकृतिमेव परेऽपि मायां
बिन्दुं च केऽपि वयमीश्वरशक्तिमाद्याम् ॥४५ ॥

ஞானியர் சிலர் உன்னை ஹிமகிரிபுத்ரி (பார்வதி, ஹைமவதி) என்று கூறுகின்றனர் மற்றும் சிலர் வாக்தேவி என்கின்றனர்; வேறு சிலர் கமலை (லக்ஷ்மி) என்கின்றனர், மற்றும் ஒரு சிலர் மூலப்பிரகிருதி என்றே கூறுகின்றனர், வேறு சிலர் மாயா என்கின்றனர் இன்னும் சிலர் பிந்து என்கின்றனர். இவை எல்லாமாகவும் விளங்கும் உன்னை நாங்கள் சிவ சக்தியாகிய ஆத்யாசக்தி என்று கூறித் துதித்து வணங்குகிறோம்.

एतानि भक्त्युपहृतानि मयात्र शम्भोर्
अङ्गानि पूजनविधौ सकलानि कृत्वा ।
पूजाफलं मम समस्तमपेतविघ्नं
पूर्णं विधेहि परमेश्वरि पाहि मां त्वम् ॥४६॥

பரமேசுவரியே! பர சிவத்தின் அங்க மந்திர மயமான இந்தச் சக்திகள் அனைவரும் பூஜை விதி முறைப்படி என்னால் தியானம் செய்யப்பட்டும் ஆவாஹனம் செய்யப்பட்டும் உள்ளனர். இவர்கள் அனைவரையும் உனது ரூப பேதங்களை எனக்கொண்டு, எனக்கு ஏற்படக்கூடிய இடையூறுகள் அனைத்தையும் விலக்கி அருளி சிவபூஜாபலம் முழுமையாக எனக்குக் கிடைக்குமாறு அனுக்கிரகம் புரிவாயாக அன்னையே! இவ்வாறு அருள்புரிந்து என்னை எப்பொழுதும் காத்தருள்.

॥ अन्तरावरणम् ब्रह्ममन्त्राः ॥

ईशानमानमत पङ्कजकर्णिकेश
भागोपविष्टममलेन्दुजटाङ्कमौलिम् ।
शूलाभयान्वितकरद्वयमेकवक्त्रं
सौम्याननं स्फटिकशुद्धतनुं त्रिणेत्रम् ॥४७॥

சிவபீடமாக முறைப்படி பாவனை செய்யப்பட்ட தாமரையின் கர்ணிகையில் ஈசான்யதிசையில் வெளிப்பட்டு விளங்கு-பவரும், களங்கமற்ற இளம்பிறை சூடிய ஜடா மகுடத்தை உடையவரும் சூலமும் வரமுத்திரையும் கொண்ட இரண்டு கரங்களை உடையவரும் ஒரு முகமும் கருணை நோக்கம் ததும்பும் ஸௌம்யமான முகப்பொலிவும் சுத்த ஸ்படிக நிறமான திருமேனியும் மூன்று கண்களும் உடையவராகத் திகழ்பவருமான ஈசான மூர்த்தியை வணங்குகிறேன்.

सव्येऽक्षसूत्रमपरत्र च मातुलङ्गं
हस्ते दधानमखिलाभरणं त्रिणेत्रम्।
पीतं जटेन्दुमकुटं तपनायुताभं
पीतानुलेपवसनं पुरुषं प्रपद्ये॥ ४८॥

வலது கரத்தில் அக்ஷமாலையையும் இடதுகரத்தில மாதுளம்பழத்தையும் கொண்டுள்ளவரும், அனைத்து விதமான ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்படட்டுள்ளவரும். முக்கண்கள் வாய்ந்தவரும், வெண்மஞ்சள் நிறத்தினரும், இளம்பிறை அணிந்த ஜடாமகுடம் உடையவரும் பத்தாயிரக் கணக்கான சூரியர்களின் பேரொளியை உடையவரும், வெண்மஞ்சள் நிற வாசனைப் பூச்சைக் கொண்டுள்ளவரும் வெண்மஞ்சள் நிறம் ஆடையும் அணிந்திருப்பவருமாகக் கிழக்கில் விளங்கும் தத்புருஷ மூர்த்தியைச் சரண் அடைகிறேன்.

वामैः खट्वाङ्गमुण्डे दधतमथ करैः खेटपाशौ च भीमं
शूलं टङ्कं च खड्गं डमरुकमपरैर्दंष्ट्रिणं याम्यपत्रे।
पिङ्गभ्रूश्मश्रुनेत्रं कपिलतरजटं वृश्चिकालब्धकण्ठं
वन्दे घोरं सुकृष्णं शशिशकलधरं भोगिभिर्भूषिताङ्गम्॥४९॥

இடது கரங்களில் கட்வாங்கம், தண்டம், கேடம், பாசம் என்னும் இவற்றை ஏந்தியுள்ளவரும் வலது கரங்களில் சூலம், டக்கம், கட்கம், டமருகம் என்னும் இவற்றை ஏந்தியுள்ளவரும், அச்சுறுத்தும் தோற்றம் வாய்ந்தவரும், கோரைப்பல் உடையவரும் செம்பழுப்பு நிறமான புருவங்களையும் மீசையையும் உடையவரும் மூன்று கண்களையும், செம்பழுப்பு நிற ஜடா முடியையும் உடையவரும் தேளை ஆபரணமாகக் கொண்டுள்ள செவிகளை உடையவரும் தூலமானதும் கிருஷ்ணநிறம் வாய்ந்ததுமான திருமேனியை

உடையவரும், இளம்பிறை சூடியவரும் நாக ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள கழுத்து முதலான அங்கங்களை உடையவருமாகத் தெற்கு நோக்கிய முகம் கொண்டு விளங்கும் அகோர மூர்த்தியை வணங்குகிறேன்.

रक्तानुलेपकुसुमाम्बरनेत्रयुग्मं
कान्ताखिलाङ्गमखिलाभरणैरुपेतम् ।
वामे सखेटमपरत्र च खड्गपाणिं
सौम्ये दले सुमुखमर्चत वामदेवम् ॥५० ॥

செந்நிற வாசனைச் சாந்து பூசப்பெற்றும் செந்நிறப் பூக்களால் ஆன மாலை சூடியும் செந்நிற ஆடை அணிந்தும் சிவந்த கந்தம் அணிந்தும் காணப்படுபவரும், ஒளியும் அழகும் மிகுந்த அங்கங்களை உடையவரும், அனைத்துவிதமான ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளவரும், இடது – கரத்தில் கேடகத்தையும் வலதுகரத்தில் கட்கத்தையும் கொண்டுள்ளவரும் புன்சிரிப்பு தவழும் பொலிவான முகம் உடையவருமாக, வடக்குத் தளத்தில் விளங்கும் வாமதேவ மூர்த்தியை வணங்குகிறேன்.

शुक्लांशुशुक्लकुसुमाम्बरगन्धभूष्यं
पश्चादजातमखिलाभरणोपपन्नम् ।
एकाननं शशिधरं जटिलं त्रिनेत्रं
वन्दे वराभयकरं नवयौवनाढ्यम् ॥५१ ॥

வெண்ணிறம் வாய்ந்தவராகவும், வெண்ணிறப்பூக்கள், வெண்ணிற ஆடை வெண் கந்தம் ஆகியவற்றை அணிந்துள்ளவராகவும், அனைத்துவிதமான ஆபரணங்-களையும் சூடிய சோபனம் வாய்ந்தவராகவும், ஒருமுகம், இளம்பிறையைத் தரித்திருக்கும் ஜடாமகுடம் மூன்று கண்கள்

ஆகியவற்றை உடையவராகவும், வரமுத்ரை காட்டும் இடதுகையும் அபயம் காட்டும் வலதுகையும் கொண்டுள்ளவராகவும் என்றும் புதிதாக விளங்கும் யௌவன சோபனம் ததும்பும் தோற்றம் வாய்ந்தவராகவும் மேற்குத் தளத்தில் விளங்கும் ஸத்யோஜாத மூர்த்தியை வணங்குகிறேன்.

पञ्चेशादीनपि च यदि वा सुस्मितान् सौम्यदृष्टीन्
कान्ताकारान् करसरसिजैरष्टभिः शोभमानान् ।
दिक्स्थैश्चास्यैर्नमत निखिलैर्भूषितैर्भूषिताङ्गान्
प्रोक्तैर्वर्णैर्जटिलशिरसश्चन्द्ररेखावतंसान् ॥५२॥

மேலே கூறப்பட்டவாறு அன்றி, ஈசானம் முதலான ஐந்து மூர்த்திகளும் வேறுவிதமாகவும் தியானிக்கப்படுபவராவர். புன்சிரிப்பு தவழும் முகம், ஸௌம்யமாக (சாந்தமான) நோக்கும் கண்கள். ஒளியும் அழகும் மிகுந்த திருமேனித் தோற்றம், ஒளியும் அழகும் வாய்ந்த தாமரைப்பூபோன்ற எட்டுக்கரங்கள், தத்தம் திசையை நோக்கியுள்ள திருமுகம், கலைச்சிறப்புடன் செய்யப்பட்ட அனைத்துவிதமான ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ள அங்கங்கள் முன்னே கூறியவாறு தத்தமக்குரிய நிறம், ஜடாமகுடம், சிரசில் சூட்டப்பட்டுள்ள இளம்பிறை இவற்றை உடையவர்களாகவும், உரிய தளங்களில் வெளிப்பட்டுள்ளவர்களாகவும் விளங்கும் ஈசானமூர்த்தி முதல் ஸத்யோஜாதம் வரை உள்ள ஐந்து பிரம்ம மூர்த்திகளையும் வணங்குகிறேன்.

## अन्तरावरणम् ( अङ्गमन्त्राः )

पद्मेशानदलाग्रस्थं नेत्रत्रयमहं भजे ।
दृक्क्रियेच्छात्मकं तत्वं मण्डलत्रितयाश्रितम् ॥५३॥

சிவாஸனமாகிய தாமரையின் ஈசான தளத்தில் வெளிப்பட்டு இருப்பதும், ஞானம், கிரியை,இச்சை மயமானதும், ஆத்ம தத்வ வித்யா தத்வ சிவதத்வ மயமானதும் சூர்மண்டல, சோமண்டல அக்னிமண்டல மயமானதும் ஆன நேத்ரத்ரயத்தை வழிபட்டு வணங்குகிறேன்.

ज्ञानशक्त्यात्मकं शम्भोर्हृदयं वन्हिपत्रगम् ।
सर्वात्मानं सितं यद्वा दीप्तं त्रिणयनं भजे ॥५४ ॥

தாமரையின் ஆக்னேய (தென் கிழக்கு) தளத்தில் வெளிப்பட்டு இருப்பதும். ஞானசக்தி மயமானதும் ஸர்வாத்மக ஸ்வபாவம் உடையதும், வெண்ணிறம் உடையதும் பிரகாசம் மிக்கதும் மூன்று கண்களை உடையதும் சிவனுக்கு உரியதுமான ஹ்ருதயமந்திர மூர்த்தியை வழிபட்டுவணங்குகிறேன்.

ईशपत्रगतं गौरं धूम्रं वा सुशिवं शिरः ।
सर्वैशितात्मकैश्वर्यं शिवस्योज्ज्वलभूषणम् ॥५५ ॥

தாமரையின் ஈசானிய தளத்தில் வெளிப்பட்டு இருப்பதும். வெண்ணிறமாக அல்லது புகைநிறமாகக் காட்சி அளிப்பதும் ஸர்வேசித்வம் எனும் ஆற்றல் மயமானதும், சிவ ஐசுவரிய நிலையை உணர்த்துவதும் பிரகாசிக்கும் ஆபரணங்களை அணிந்திருப்பதும் சிவரூபமானதுமான, சிரோமந்திர மூர்த்தியை வழிபட்டு வணங்குகிறேன்.

ज्वालिनीं च शिखां रक्तां कृष्णां वा नैरृते दले ।
वशितामपराधीनां वक्ष्यमाणाकृतिं विभोः ॥५६ ॥

தாமரையின் நிருதி தளத்தில் வெளிப்பட்டு இருப்பதும், ஜ்வாலைகளோடு கூடியதும். செந்நிறமாக அல்லது கிருஷ்ண நிறமாகக் காட்சி அளிப்பதும் வசித்வம் எனும் ஆற்றல்

மயமானதும் அபராதீனம் (பிறருக்கு ஆட்படாதிருக்கும் சுதந்திரத் தன்மை) எனும் சிவ குணத்தை உணர்த்துவதும், ஆகமத்தில் கூறப்பட்ட வடிவ லக்ஷணத்தை உடையதுமாக சிவனுக்கு உரியதாய் விளங்கும் சிரோ மந்திர மூர்த்தியை வழிபட்டு வணங்குகிறேன்.

पिङ्गलं कवचं कृष्णं हरितं वानिलाश्रयम् ।
विश्वरक्षाकरं वन्दे तेजो विश्वाधिकं विभोः ॥ ५७ ॥

தாமரையின் வாயு தளத்தில் (வடமேற்கில்) வெளிப்பட்டு இருப்பதும், பென்னிறமாகவோ, கிருஷ்ண நிறமாகவோ, ஹரித (மஞ்சள்) நிறமாகவோ காட்சி அளிப்பதும், பிரபஞ்சம் முழுவதுக்கும் ரக்ஷை தருவதும், ஒளிமயமானதும், பிரபஞ்சம் எங்கும் வியாபித்து இருப்பதுமாக. சிவனுக்குரியதாக விளங்கும் கவச மூர்த்தியை வணங்குகிறேன்.

शिवास्त्रं प्रलयार्काभं चतुर्दिक्षु कृतार्चनम् ।
वन्दे प्रतापमीशस्य दंष्ट्रिणं भीमनिस्वनम् ॥५८ ॥

தாமரையின் நான்கு திசைகளிலும் சூழ்ந்து இருப்பதாக அர்ச்சிக்கப்படுவதும் பிரளய காலத்துச் சூரியன் போன்ற பேரொளியை உடையதும் சிவபெருமானின் பிரதாப குணத்தை உணர்த்துவதும், கோரைப்பல் கொண்டதும் அச்சுறுத்தும் சப்தங்கள் வெளிப்படுத்துவதுமாக விளங்கும் சிவாஸ்திர மூர்த்தியை வணங்கித் துதிக்கிறேன்.

अङ्गानि चोद्धृतवराभयशक्तिशूलान्य् -
अब्जासनान्यभिमुखानि शिवस्य वन्दे ।
आस्यैश्चतुर्भिरथवा सवराभयानि
चैकाननानि सजटेन्दुविभूषणानि ॥५९ ॥

லய அங்க மூர்த்திகளாக விளங்கும் ஹிருதயம் முதலான மூர்த்தங்கள் மற்றொரு விதமாக வரம், அபயம், சக்தி, சூலம் தாங்கிய நான்கு கரங்கள் உடையர்களாகவும், பத்மாஸனத்தில் இருப்பவர்களாகவும் நான்கு திரு முகங்களை உடையவர் – களாகவும் சிவபெருமானை நோக்கித் திரும்பியுள்ளவர் – களாகவும் தியானிக்கப்படலாம். இவ்வாறு தியானிக்கப்பட உள்ள ஹிருதயம் முதலான மூர்த்தங்களை வணங்குகிறேன். அல்லது இவர்கள் ஒரு முகம் உடையவர்களாகவும், வரமும் அபயமும் காட்டும் இரண்டு கரங்களை உடையவர்களாகவும், இளம்பிறை சூடிய சடை முடியும் ஆபரண அலங்காரமும் உடையவர்களாகவும் தியானிக்கப்படலாம்.

द्वितीयावरणम् ( विद्येश्वराः )

द्वितीयावरणे प्राच्यामनन्तं हेमसन्निभम् ।
सूक्ष्मं च वह्निभागस्थं वन्दे वह्निसमत्विषम् ॥६०॥

இரண்டாவது ஆவரணம்

இரண்டாவது ஆவரணத்தில் கிழக்கில் பொன்னிற ஒளியுடன் திகழும் அனந்தேசுவரர்: ஆக்னேய திக்கில் வெளிப்பட்டு இருந்து சிவாக்னிக்கு நிகரான ஒளியுடன் திகழும் ஸூக்ஷ்மர் - இவர்களை வணங்குகிறேன்.

तमालसन्निभं वन्दे याम्यभागे शिवोत्तमम् ।
नैरृते षट्पदाभासमेकनेत्रमवस्थितम् ॥६१॥

தெற்கில் பச்சிலை நிறத்துடன் திகழும் சிவோத்தமரையும் நிருதியில் வெளிப்பட்டு இருந்து கருவண்டின் நிறத்துடன் திகழும் ஏகநேத்திரரையும் வணங்குகிறேன்.

कुन्देन्दुधवलाकारमेकरुद्रं तु वारुणे ।
त्रिमूर्तिम् मारुते भागे नीहारनिभमाश्रये ॥६२॥

மேற்கில் முல்லைப் பூவைப் போன்றும் சந்திரன் போன்றும் வெண்ணிறமான தேகத்துடன் திகழும் ஏக ருத்திரரையும் வாயுதிக்கில் பனிக்கட்டி போன்ற நிறத்துடன் திகழும் திரிமூர்த்தியையும் வணங்கிச் சரண் அடைகிறேன்.

श्रीकण्ठं सोमदिग्भागे रक्तवर्णमवस्थितम् ।
प्रपद्ये पाण्डराकारमैशाने च शिखण्डिनम् ॥६३ ॥

வடக்கில் வெளிப்பட்டு இருந்து செந்நிறத்துடன் திகழும் ஶ்ரீகண்டரையும், ஈசான திசையில் வெண்ணிறத்துடன் காட்சி அளிக்கும் சிகண்டியையும் வணங்கிச் சரண் அடைகிறேன்.

चतुरः प्राक्तनान् दिक्षु विदिक्ष्वन्यानवस्थितान् ।
यद्वा विद्येश्वरान् वन्दे स्वस्वदिक्पतिसन्निभान् ॥६४ ॥

இவ்வாறு இன்றி, அனந்தேசர் முதல் ஏகநேத்திரர் வரை உள்ள நால்வரும் முறையே கிழக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் வடக்கிலும் உள்ளவர்களாகவும், ஏகருத்திரர் முதல் சிகண்டிவரை உள்ள நால்வரும் ஆக்னேயம் முதலான கோண திசைகளில் உள்ளவர்களாகவும் தியானித்து அர்ச்சிக்கலாம். அப்பொழுது அந்த அந்த திசைக்குரிய திக்பாலகரின் நிறத்திலேயே இவர்களும் உள்ளவர்களாகத் தியானிக்க வேண்டும். வேறு விதமாகவும் இவர்கள் தியானிக்கப்படலாம்.

खड्गं बाणमथाक्षसूत्रमभयं पद्मं च सव्यैः करैः
वामैः खेटधनुःकमण्डलुवरान् शूलान्वितान् बिभ्रतः ।
पद्मस्थांश्चतुराननान् प्रतिमुखं नेत्रत्रयेणान्वितान्
विद्येशान् रुचिराननान् धृतजटाजूटेन्दुखण्डान् भजे ॥६५ ॥

கட்கம், பாணம், அக்ஷமாலை, அபயமுத்ரை, பத்மம் இவற்றை வலது கரங்களில் கொண்டுள்ளவர்களாகவும் கேடம், வில்,

கமண்டுலு, வர முத்ரை, சூலம் இவற்றை இடதுகரங்களில் கொண்டுள்ளவர்களாகவும், பத்மாஸனத்தில் இருப்பவர் – களாகவும், ஒளிமிக்க நான்கு முகங்கள் உடையவர்களாகவும், ஒவ்வொரு முகத்தில் மூன்று கண்கள் கொண்டுள்ளவர் – களாகவும், இளம்பிறை சூடிய ஜடா முடி உடையவர்களாகவும் இவ்வாறு அக்ஷ்டவித்யேசுவரர்களைத தியானித்து வழிபடுகிறேன்.

यद्वा करैरष्टभिरेव युक्तान् प्रागुक्तवर्णाकृतिशोभमानान् ।
एकाननान्वा करपङ्कजाभ्यां कृताञ्जलीनीशमुखानशेषान् ॥६६ ॥

மேலும் வேறுபட்ட தியான முறைகளும் உண்டு. முற்கூறப்பட்ட நிறமும் வடிவமும் உடையவர்களாகவும் மங்களகரமான தோற்றம் வாய்ந்தவர்களாகவும் எட்டுக் கைகளை உடையவர்களாகவும் இவர்களைத் தியானித்து வணங்கலாம். அல்லது ஒரு முகம் உடையவர்களாகவும், அஞ்சலி பந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ள தாமரை போன்ற இரண்டு கைகள் உடையவர்களாகவும் பிந்து ஸ்தானத்தில் உள்ள சிவபெருமானை நோக்கித் திரும்பி உள்ளவர்களாகவும் வித்யேசுவரர்கள எண்மரையும் தியானித்து வணங்கலாம்.

## तृतीयावरणम् ( गणाः )

तृतीयावरणे प्राच्यां चतुर्हस्तं विमानगम् ।
सवराभयशूलाक्षसूत्रं रक्तं च नन्दिनम् ॥६७ ॥

மூன்றாவது ஆவணத்தில், கிழக்கில், விமானத்தில் (கோஷ்டத்தில்) எழுந்தருளி இருப்பவராகவும் வரம், அபயம், சூலம், அக்ஷமாலை என்னும் இவற்றைக் கொண்டுள்ள நான்கு கரங்களை உடையவராகவும் செந்நிறத்தினராகவும் காட்சி அளிக்கும் நந்திகேசுவரரை வணங்குகிறேன்.

कपालखड्गान्वितवामहस्तं खेटत्रिशूलान्वितसव्यपाणिम् ।
पीनाङ्गमापिङ्गजटं सुभीमं वन्दे महाकालमथाग्निभागे ॥६८ ॥

இந்த ஆவரணத்தில் தென்கிழக்கில் இடது கையில் கபாலத்தையும் கேடத்தையும் கொண்டுள்ளவராகவும் வலதுகையில் கட்கத்தையும் திரிசூலத்தையும் கொண்டுள்ள-வராகவும், வெண்மஞ்சள் நிற அங்கங்களை உடையவராகவும், செம்பழுப்பு நிற ஜடாமுடி உடையவராகவும் அச்சுறுத்தும் தோற்றம் வாய்ந்தவராகவும் திகழும் மஹாகாளரை வணங்குகிறேன்.

स्नाय्वस्थित्वङ्निबद्धाङ्गं याम्यभागे सितच्छविम् ।
विमानवर्तिनं त्र्यक्षं भृङ्गिसंज्ञं गणं भजे ॥६९ ॥

சிறுநரம்புகள், எலும்பு, தோல் - இவற்றால் மட்டும் நன்கு கட்டப்பட்ட (உருவாக்கப்பட்ட) திருமேனி உடையவராகவும் சிவத்துவம் வாய்ந்தவராகவும், விமானத்தில் எழுந்தருளி இருப்பவராகவும் மூன்றுகண்கள் உடையவராகவும், தெற்கில் விளங்குபவரும், பிருங்கி எனப் பிரசித்தி பெற்றவருமான சிவகணநாதரை வணங்கித் துதிக்கிறேன்.

गणेशं वामनाकारं प्रोक्तरूपयुतं भजे ।
राक्षसाशास्थितं त्र्यक्षं शूर्पकर्णं गजाननम् ॥७० ॥

குறுகிய வடிவம் உடையவராகவும் ஆகமத்தில் கூறப்பட்ட வடிவத்தையும் ஆயுதங்களையும் கொண்டுள்ளவராகவும், செந்நிறம் வாய்ந்தவராகவும், முறம் போன்ற செவிகளை உடையவராகவும் யானை முகம் உடையவராகவும் நிருதி திசையில் எழுந்தருளும் கணபதியை வணங்கித் துதிக்கிறேன்.

प्रत्यगाशास्थितं वन्दे वृषं च वृषभाकृतिम् ।
साक्षाद्धर्मं सितं त्र्यक्षं परमेशस्य वाहनम् ॥७१ ॥

ரிஷப வடிவத்தை உடையவரும், பிரத்தியக்ஷமாகத் தோன்றும் தர்ம தேவதையாக விளங்குபவரும், வெண்ணிறத்தினரும், மூன்று கண்கள் உடையவருமாக விளங்கிப் பரமேசுவரனின் வாகனமாக மேற்கில் எழுந்தருளித் திகழும் ரிஷப தேவரை வணங்குகிறேன்.

पीतं शक्तिं सघण्टां ध्वजमथ कमलं कुक्कुटं प्रासदण्डौ
बिभ्राणं सव्यभागे वरमभयधनुर्बाणटङ्कांश्च हस्तैः ।
षड्वक्त्रं द्वादशाक्षं शिखिनि शरभवं पाणिभिर्वा चतुर्भिर् -
ङ्कैक्ये शक्त्यभीभ्यां भजत वरयुतं कुक्कुटं चादधानम् ॥७२ ॥

வேலாயுதம், மணி, கொடி, தாமரை, கோழிக்கொடி, பிராஸம் (ஆயுதவரை) தண்டாயுதம், வரமுத்ரை, அபயமுத்ரை, வில், அம்பு, டங்கம் என்னும் இவற்றைக் கொண்டுள்ள பன்னிரண்டு திருக்கரங்களை உடையவராகவும், ஆறு திருமுகங்களை உடையவராகவும் பன்னிரண்டு கண்களை உடையவராகவும் நெற்றிக்கண் அக்னி சரவணப் பொய்கை எனும் இரண்டிலிருந்தும் உத்பவித்து வெளிப்பட்டவராகவும் வாயுமூலையில் எழுந்தருளி விளங்கும் ஷண்முகப் பெருமானை வணங்கித் துதிக்கிறேன். அல்லது நான்கு கரங்களுகம் ஒரு முகமும் உடையவராகவும் கைகளில் வேலாயுதம், அபயமுத்ரை, வரமுத்ரை, கோழிக்கொடி எனும் இவற்றைக் கொண்டுள்ளவராகவும், மற்றொரு விதமாக வாயு மூலையில் விளங்கும் குகப் பெருமானை வணங்கித் துதிக்கிறேன்.

सिंहारूढामहं वन्दे भूषितां दर्पणोद्वहाम्।
सौम्यभागे स्थितां देवीं द्विभुजां गौरविग्रहाम्॥७३॥

சிம்ம வாகனத்தில் ஆரோகணித்து இருப்பவளும் பல்வகை ஆபரணங்களை அணிந்துள்ளவளும், கண்ணாடி போன்ற தெளிவான தோற்றம் கொண்டுள்ளவளும், இரண்டு கரங்களைக் கொண்டுள்ளவளும் கம்பீரமான வடிவம் உடையவளும் ஆக, வடக்குத் திக்கில் எழுந்தருளி விளங்கும் துர்காதேவியை நான் வணங்குகிறேன்.

(கௌரம் = இந்த இடத்தில் கம்பீரம், ஸ்தூலம் எனப்பொருள்படும்)

चण्डेश्वरं विमानस्थं वक्ष्यमाणाकृतिं नुमः।
ईश्वराशागतं कृष्णं गणेशावरणे स्थितम्॥७४॥

விமானத்தில் எழுந்து அருள்பவராகவும், ஆகமத்தில் வருணித்துக் கூறப்பட்ட வடிவச் சிறப்பை உடையவராகவும், கிருஷ்ண நிறத்தினராகவும், சிவகணங்களுக்குரிய மூன்றாவது ஆவரணத்தில் ஈசான திசையில் இருப்பவராகவும் விளங்கும் சண்டேசுவரை நமஸ்கரிக்கிறோம்.

## चतुर्थावरणम् ( लोकपालाः )

हेमवर्णं सहस्राक्षं वज्रहस्तं गजाश्रयम्।
पूर्वाशानायकं वन्दे चतुर्थावरणे स्थितम्॥ ७५॥

சதுர்த்தாவரணம் : பொன் நிறத்தினராகவும், ஆயிரம் கண்கள் உடையவராகவும், கையில் வஜ்ராயுதம் ஏந்தியராகவும், (ஐராவதம் எனும்) யானை மேல் வீற்றிருப்பவராகவும் நான்காவது ஆவரணத்தில் கிழக்குத் திசையின் நாயகராக எழுந்தருளி விளங்கும் இந்திரனை வணங்குகிறேன்.

मेषारूढं प्रदीप्तार्चिर्भासुरं हव्यवाहनम् ।
निजाशासंस्थितं वन्दे शक्तिहस्तं महाबलम् ॥७६ ॥

ஆட்டுவாகனத்தில் அமர்ந்திருப்பவராகவும், நன்கு ஒளிவீசும் அக்னி கிரணங்களை உடையவராகவும், பிரகாசத்துடன் விளங்குபவராகவும் சக்தி ஆயுதம் ஏந்திய கையை உடையவராகவும், மஹாபலம் வாய்ந்தவராகவும் தனக்குரிய அக்னி திக்கில் எழுந்தருளி இருக்கும் அக்னிதேவனை வணங்குகிறேன்.

(ஹவ்யவாஹனம் = அக்னி ஹவ்யத்தைத் தாங்கிக்கொண்டு உரிய தெய்வத்திடம் சேர்ப்பதால் இப்பெயர்)

दक्षिणाशापतिं कृष्णं यमं महिषवाहनम् ।
दण्डिनं भीषणम् वन्दे दंष्ट्रिणं घोरलोचनम् ॥७७ ॥

கிருஷ்ணநிறத்தினரும், மஹிஷத்தின்மேல் ஆரோகணித்து இருப்பவரும் தண்டாயுதம் ஏந்தியவரும், அச்சுறுத்தும் தோற்றம் உடையவரும் கோரைப் பல்லுடன் விளங்கும் முகம் உடையவரும், நிஷ்டூரமாக நோக்கும் கண்களை உடையவருமாக விளங்கித் தெற்குத் திசையின் நாயகனாகத் திகழும் யமதேவனை வணங்குகிறேன்.

प्रेतारूढं करालास्यं खड्गपाणिं निशाचरम् ।
निर्ऋतिं च निजाशास्थं धूम्रमुग्रदृशं भजे ॥७८ ॥

பிரேத வாகனத்தில் அமர்ந்திருப்பவரும், பயங்கரமான முகம் உடையவரும் (அல்லது அகன்று திறந்த வாயுடன் காட்சி அளிக்கும் முகம் உடையவரும்) கட்கம் ஏந்திய கரத்தினரும் ராக்ஷஸ குலத்தைச் சார்ந்தவரும், புகைநிறம் வாய்ந்தவரும், வெகுண்டு நோக்கும் கண்களை உடையவருமாகத் தனக்குரிய தென்மேற்குத்திசையில் விளங்கும் நிருதி தேவனை வணங்கித் துதிக்கிறேன்.

पश्चिमाशापतिं पाशधरं मकरवाहनम् ।
नमामि यादसां नाथं वरुणं श्वेतविग्रहम् ॥७९ ॥

பாசம் ஏந்திய கரத்தினரும், மகர வாகனத்தில் அமர்ந்-திருப்பவரும் யாதுதானவர் எனப்படும் குலத்தைச் சார்ந்த நாயகரும், வெண்ணிறத் திருமேனி உடையவருமாக விளங்கி மேற்குத் திசையின் அதிபதியாகத் திகழும் வருண தேவனை நமஸ்கரிக்கிறேன்.

पीनाङ्गं हरिणासीनं वायुमङ्कुशधारिणम् ।
सदागतिं निजाशास्थं श्यामाङ्गं कुञ्चितभ्रुवम् ॥८० ॥

வெண்மஞ்சள் நிறமான அங்கம் உடையவரும் மான் வாகனத்தில் அமர்ந்திருப்பவரும், அங்குசம் தாங்கிய கரத்தினரும், எப்பொழுதும் இயங்கிக் கொண்டே இருக்கும் சுபாவம் உடையவரும் வளைந்துயர்ந்த புருவங்களை உடையவருமாகத் தனக்குரிய வடமேற்குத் திசையில் எழுந்தருளி இருக்கும் வாயு தேவனை வணங்குகிறேன். அல்லது, மற்றொரு நிலையில், சியாமள நிறத்துடன் இத்தகைய லட்சணங்களுடன் திகழும் வாயுதேவனை வணங்குகிறேன்.

कुबेरं च गदाहस्तं गौराङ्गं निधिसंस्थितम् ।
ह्रस्वपादकरं स्त्रीभिर्वृतमुत्तरदिक्पतिम् ॥८१ ॥

கதையை ஏந்தியுள்ள கரத்தினரும், வெண்ணிற அங்கம் உடையவரும், நிதிகளின் குவியலில் இருக்கை கொண்டுள்ளவரும், குறுகி விளங்கும் கைகளையும் கால்களையும் உடையவரும், பெண்களால் சூழப்பட்டுள்ள – வருமாக எழுந்தருளி வடக்குத் திசைக்கு அதிபதியாக விளங்கும் குபேர தேவனை வணங்குகிறேன்.

श्वेतं वृषस्थमीशानं त्र्यक्षं व्याघ्राजिनाम्बरम् ।
शूलिनं जटिनं चन्द्रधरमीडे स्वदिक्स्थितम् ॥८२ ॥

வெண்ணிறத் திருமேனி உடையவராகவும், ரிஷப வாகனத்தை உடையவராகவும், மூன்று கண்களைக் கொண்டவராகவும் புலித்தோல் ஆடையை அணிந்துள்ளவராகவும், சூலம் ஏந்திய கையினராகவும், ஜடாமுடி உடையவராகவும், இளம்பிறை சூடியவராகவும் எழுந்தருளித் தனக்குரிய வடகிழக்குத் திசைக்கு அதிபதியாக விளங்கும் ஈசான தேவனை வணங்குகிறேன்.

तत्रैवोर्ध्वदिशानाथं प्रोक्ताकारं चतुर्मुखम् ।
कमण्डल्वक्षमालाङ्कं कुशदण्डधरं भजे ॥८३ ॥

அதே திசையிலேயே, (ஈசானத்தில்) உயரே மேற்புறத்தில் நான்கு கைகள் உடையவராகவும், ஆகமத்தில் கூறப்பட்ட லக்ஷணங்களுடன் கூடிய உருவம் உடையவராகவும் கரங்களில் கமண்டுலு, அக்ஷமாலை, தர்ப்பை, தண்டம் எனும் இவற்றை ஏந்தியவராகவும் விளங்கி ஊர்த்வ திசைக்கு அதிபதியாகத் திகழும் பிரம்ம தேவனை வணங்கித் துதிக்கிறேன்.

शङ्खचक्रगदापद्महस्तं गरुडवाहनम् ।
श्याममेकाननं विष्णुं वनमालाविभूषितम् ॥८४ ॥

अधोदिगधिपं कान्तं पीतवस्त्रं श्रियान्वितम् ।
चतुर्हस्तं त्रिवक्त्रं वा भोगिशय्यागतं भजे ॥८५ ॥

சங்கு, சக்கிரம், கதை, தாமரை - இவற்றை ஏந்தியுள்ள நான்கு கரங்கள் உடையவரும், கருட வாகனத்தில் அமர்ந்திருப்பவரும், சியாமள நிறத்தினரும், ஒரு முகம் உடையவரும் துளசி

மாலையால் அலங்கரிக்கப் பட்டுள்ளவரும் வசீகரமான தோற்றம் வாய்ந்தவரும், வெண்மஞ்சள் நிறமான ஆடை அணிந்திருப்பவரும், லக்ஷ்மியோடு விளங்குபவருமாக வெளிப்பட்டு அதோதிசைக்கு (கீழ்த்திசைக்கு) அதிபதியாகத் திகழும் விஷ்ணு மூர்த்தியை வணங்கித் துதிக்கிறேன். இந்த விஷ்ணுவை நான்கு கரங்கள் உடையவராகவோ, இரண்டு கரங்கள் உடையவராகவோ, ஆதி சேஷனாகிய படுக்கை விரிப்பில் சயனித்து இருப்பவராகவோ இவ்வாறு வேறு பிரகாரமாகவும் தியானித்து வணங்குகிறேன்.

## पञ्चमावरणम् (लोकपालास्त्राणि)

वज्रं तु पुरुषं स्थूलं दृढं कर्कशविग्रहम् ।
बलिनं वज्रमूर्धानं दीप्तं प्राक् पञ्चमावृतौ ॥८६ ॥

பஞ்சமாவரணம் : புருஷ வடிவாகவும், பருமையும் திடத்-தன்மையும் உடையதாகவும், கடினமாகவும் சுரசுரப்பாகவும் விளங்கும் உருவத்தை உடையதாகவும், பலம் செழிந்ததாகவும், வஜ்ர இலச்சினையை சிரசில் தாங்கியுள்ளதாகவும், ஒளி வீசுவதாகவும் ஐந்தாவது ஆவரணத்தில் கிழக்குத் திசையில் விளங்கும் வஜ்ராயுதத்தை வணங்குகிறேன்.

शक्तिं च योषिदाकारामाग्नेय्यां दिशि लोहिताम् ।
बिभ्राणां शिरशा शक्तिं त्रिकोणस्थामुपाश्रये ॥८७ ॥

பெண்வடிவமாகவும், செந்நிறம் வாய்ந்ததாகவும், முக்கோண மண்டலத்தில் இருப்பதாகவும், சக்தி இலச்சினையை சிரசில் தாங்கியுள்ளதாகவும் அக்னிதிக்கில் விளங்கும் சக்தி ஆயுதத்தை உபாஸிக்கிறேன்.

दण्डं च दक्षिणे भागे कृष्णं पुरुषविग्रहम् ।
दण्डाकारशिरोयुक्तं वन्दे लोहितलोचनम् ॥८८ ॥

கிருஷ்ணநிறம் வாய்ந்ததாகவும், புருஷவடிவம் கொண்ட-தாகவும், சிவந்திருக்கும் கண்களை உடையதாகவும், தண்ட இலச்சினையை சிரசில் கொண்டுள்ளதாகவும் தெற்கில் விளங்கும் தண்டாயுதத்தை வணங்குகிறேன்.

नैरृत्यां पुरुषाकारं खड्गं श्यामप्रभान्वितम् ।
खड्गालङ्कृतमूर्धानं क्रुद्धं क्रूरदृशं नुमः ॥८९ ॥

புருஷவடிவம் கொண்டதாகவும், சியாமள நிறத்துடன் கூடியதாகவும், கோபகரமான தோற்றம் உடையதாகவும் க்ரூரமாகவும் கடுமையாகவும் நோக்கும் கண்களை உடையதாகவும், கட்க இலட்சினையை சிரசில் கொண்டு – ள்ளதாகவும் நிருதி திசையில் விளங்கும் கட்காயுதத்தை நமஸ்கரிக்கிறேன்.

नाभ्यधो भुजगाकारं तदूर्ध्वं पुरुषाकृतिम् ।
पाशं सप्तफणोपेतमूर्धानं पश्चिमे भजे ॥९० ॥

நாபிக்குக் கீழே பாம்பு வடிவத்தை உடையதாகவும், நாபிக்கு மேலே புருஷ வடிவத்தை உடையதாகவும், ஏழு படங்களுடன் கூடிய சிரசை உடையதாகவும் மேற்குத் திசையில் விளங்கும் பாசாயுதத்தை வணங்கித் துதிக்கிறேன்.

प्रपद्ये वायुदिग्भागे ध्वजं मूर्ध्नि ध्वजान्वितम् ।
पीतं च पुरुषाकारं व्यावृतास्यं महाभुजम् ॥९१ ॥

வெண்மஞ்சள் நிறத்துடனும், புருஷ வடிவத்துடனும், திரும்ப அசைந்து சுழலும் கண்களையுடை முகத்துடனும், மஹா பலத்துடனும், துவஜ இலச்சினையைச் சிரசில் கொண்டும் வாயுமூலையில் விளங்கும் துவஜாயுதத்தை சரண் அடைகிறேன்.

कन्यारूपां गदां पीतामापीनजघनस्थलाम् ।
गदाकारशिरोयुक्तामुत्तरस्यां नतोऽस्म्यहम् ॥९२ ॥

கன்னிகா வடிவம் உடையதாகவும், வெண்மஞ்சள் நிறம் வாய்ந்ததாகவும், நன்கு செழித்துப் பருத்துள்ள ஜகன பாகத்தை உடையதாகவும், கதை வடிவான இலச்சினையை சிரசில் கொண்டுளள்தாகவும் வடக்கில் விளங்கும் கதாயுதத்தை நமஸ்கரிக்கிறேன்.

त्रिशूलं पुरुषाकारं दिव्यं श्यामकलेवरम् ।
त्रिशूलशिरसं शश्वन्नमामीशानदिग्गतम् ।९३ ॥

புருஷ வடிவம் உடையதாகவும், பிரகாசம் மிகுந்ததாகவும், சியாமள நிற வடிவம் உடையதாகவும், திரிசூல இலச்சினையை சிரசில் தாங்கியுள்ளதாகவும் ஈசான திக்கில் விளங்கும் திரிசூலாயுதத்தை எப்பொழுதும் வணங்கி நிற்கிறேன்.

शङ्खाभं पद्मकोशाङ्कमूर्धानं पुरुषाकृतिम् ।
नौमि दिव्यं विरिञ्चास्त्रं शुक्लाभं शुभलोचनम् ॥९४ ॥

சங்கு போன்ற வெண்மை நிறத்துடனும், புருஷவடிவத்து – டனும் வெண்ணிற அங்கத்துடனும், சுபகரகமாக நோக்கும் கண்களுடனும், ஒளியுடனும், பத்ம முகுள இலச்சினையை சிரசில் தாங்கியும் ஊர்த்வ திசையில் விளங்கும் பிரம்மாஸ்திரத்தை நமஸ்கரிக்கிறேன்.

चक्रं शतारचक्राङ्कमूर्धानं पुरुषाकृतिम् ।
श्यामदेहं मुकुन्दास्त्रं सेवे निर्ऋतिकोणगम् ॥ ९५ ॥

நூறு ஆரங்கள் உடையதாகவும், புருஷ வடிவம் உடைய-தாகவும் சியாமள நிற தேகம் உடையதாகவும், சக்ரவடிவத்தில்

திகழ்வதாகவும், சக்ர இலச்சினையை சிரசில் தாங்கியுள்ள-தாகவும் நிருதி திசையில் அதோ பாகத்தில் விளங்கும் விஷ்ணுவாஸ்திரத்தை ஸேவிக்கிறேன்.

॥शिवाग्निः॥

सप्तजिह्वान्वितं रक्तं पञ्चास्यं प्रज्वलिच्छखम्।
वागीशीगर्भसम्भूतं शिवाग्निं शिवदं भजे॥ ९६॥

ஏழு நாக்குகளோடு கூடியதாகவும், செந்நிறம் வாய்ந்ததாகவும், ஐந்து முகங்கள் கொண்டிருப்பதாகவும், நன்கு ஜொலித்துக் கிளர்ந்துள்ள சிகையை உடையதாகவும், வாகீசுவரியின் கர்ப்பத்திலிருந்து தோன்றியதாகவும் சிவபாக்கியம் அருள்வதாகவும் திகழும் சிவாக்னியைப் போற்றி வணங்குகிறேன்.

तत्रस्थं तु सदेशानमाश्रयानुगुणान्वितम्।
सर्वाभीष्टप्रदं वन्दे हविरादानतत्परम्॥ ९७॥

சிவாக்னியின் இருதயத்தில் வெளிப்பட்டுள்ளவரும், ஸதாசிவம் எனும் பெயருடையவரும் தன் வடிவத்துக்கேற்ற சிவகுணங்களோடு கூடியவரும், விரும்பிய பேறுகள் அனைத்தையும் போகங்கள் அனைத்தையும் அருள்பவரும், அர்ப்பணிக்கப்படும் ஹவிஸ் அன்னத்தில் மிகுந்த விருப்பம் உடையவருமாக, சிவாக்னியின் மத்தியில் விளங்கும் சிவபெருமானை வணங்குகிறேன்.

॥शिवबलिभुजः॥

रुद्रान् मातृस्तदनु सगणान् गुह्यकान् सग्रहांस्तान्
वन्दे दैत्यानथ निशिचरान्नागनक्षत्रराशीन्।

विश्वांश्चैताञ्शिवबलिभुजः क्षेत्रपालं च कृष्णं
केशैरूर्ध्वैः कपिलरुचिभिर्दंष्ट्रिणं शूलहस्तम्॥ ९८ ॥

ருத்ரகணங்கள், மாத்ருக்கள், இவர்களுடன் தொடர்புடைய கணங்கள், குஹ்யகர்கள், கிரகங்கள், தைத்தியர்கள், ராக்ஷஸ கணங்கள், நாகர்கள், நக்ஷத்ரக் கூட்டங்கள், என சிவ பலியைப் புசிப்பவர்களாக இவ்வாறு விளங்கும அனைவரையும் வணங்குகிறேன். கிருஷ்ண நிறத்துடன் சேர்த்துக் கட்டப்பட்ட செம்பழுப்பு நிறமான கேச பாரத்துடனும், கோரைப் பற்களுடனும், சூலம் ஏந்திய கையுடனும் விளங்கும் க்ஷேத்ரபாலரையும் வணங்குகிறேன்.

॥गुरुपूजा ॥

पाशान्विमोच्य कृपया निखिलाननादीन्
यो मां शरीरनिधने परमुक्तिभाजम्।
चक्रे समस्तशिवशास्त्रविबोधहेतुं
नित्यं तमेव गुरुनाथमहं प्रपद्ये ॥ ९९ ॥

ஆன்மக் கூட்டங்களை அனாதிகாலம் தொட்டே பந்தித்து இருக்கும் அனைத்து விதமான பாசங்களை அடியோடு நீக்கி, இந்தச் சரீர முடிவில் மேலான முக்திப் பேற்றை அடையுமாறு எவர் செய்தருள்கிறாரோ சிவ சம்பந்தமான சாஸ்திரங்கள் அனைத்தையும் விசேஷ அர்த்தத்துடன் உணர்ந்து ஞானம் பெறுவதற்குக் காரண பூதராக உள்ள அத்தகைய குருநாதரையே நான் எப்பொழுதும் சரண் அடைந்துள்ளேன்.

॥विद्यापीठाश्रय ईश्वरः ॥

सर्वज्ञानप्रदं शम्भुं सर्वाज्ञानविघातकम्।
कायेन मनसा वाचा विध्यापीठाश्रयं भजे ॥ १०० ॥

அனைத்தையும் அறியும் ஆற்றலை அருள்பவரும், அறியாமை முழுகூதையும் போக்க வல்லவரும், வித்யா பீடத்தை இருப்பிடமாக ஆசிரயித்துள்ளவரும் ஆன பர சம்பு நாதரை உடலாலும், மனத்தாலும் வாக்காலும் போற்றித் துதிக்கிறேன்.

॥चण्डेश्वरः॥

कृष्णं सुदंष्ट्रचतुराननमिन्दुचूडं
शार्दूलचर्मवसनं जटिलं त्रिणेत्रम् ।
टङ्कं च शूलमथ कुण्डिकयाक्षमालां
चण्डेश्वरं स्मर करैर्दधतं चतुर्भिः ॥ १०१ ॥

கிருஷ்ண நிறததினரும் தம்ஷ்ட்ரத்தோடு காட்சியளிக்கும் நான்கு திரு முகங்கள் உடையவரும், இளம்பிறை அணிந்துள்ளவரும் புலித்தோல் ஆடையை உடுத்தி இருப்பவரும், ஜடாமுடி உடையவரும், முககண்கள் கொண்டுள்ளவரும், டங்கம், சூலம், குண்டிகை, அக்ஷமாலை ஆகிய இவற்றை நான்கு கரங்களிலும் ஏந்தியுள்ளவரும் ஆகக் காட்சி அளிக்கும் த்வனி சண்டேசுவரரை நான் தியானிக்கிறேன்.

॥फलश्रुतिः॥

पशुपतिपदपद्मद्वन्द्वमभ्यर्च्य भक्त्या
प्रतिदिनमुपचारैः स्तोत्रमेतत्पठन्तः ।
अभिमतमिह सर्वं देहपातेच मोक्षं
परमगतिमविघ्नं देशिकाद्याः प्रयान्ति ॥ १०२ ॥

உயிர்க் கூட்டகள் அனைத்தையும் ஆண்டு அருள்புரிவதால் பசுபதி எனப்படும் சிவபெருமானின் இரண்டு திருவடித்-தாமரைகளையும் பக்தி பூர்வமாக நாள்தோறும் உரிய

உபசாரங்களுடன் அர்ச்சித்து வழிபட்டு இந்தத் தோத்திரத்தைப் படிக்கும் குரவர்களும் ஏனையோரும் இப்பிறவியில் தாம் விரும்பிய பேறுகள் அனைத்தையும் அடைந்து, இடையூறுகள் அனைத்தும் நீங்கப் பெற்றவர்களாய், தேகவியோக காலத்தில் மேலான முக்திப் பேற்றையும் அடைவார்கள்.

சிவம் பூயாத்